# தமிழ் நாடு

திங்களிதழ்

இதழ் - 22 | தமிழ்நாட்டு மக்களின் உரிமைக் குரல் | நன்கொடை உரு.15


## பாசிச பார்ப்பனியம் என்பது பாஜகவிடம் நிலை கொண்டுள்ளது..

# பாசிச பார்ப்பனியத்தை வீழ்த்துகிற அரசியலை முன்னெடுப்பதன்வழிதான் பாஜக வை வீழ்த்தமுடியும்..

## இந்தியா கூட்டணியின் முயற்சிகள் பயனளிக்க அவர்கள் என்னவெல்லாம் செய்யவேண்டும்

இந்தியா முழுக்க ஆரியப் பார்ப்பனிய பாசிச அதிகாரம் வெறி பிடித்து ஆடுகிறது..

வடக்கில் உள்ள மாநிலங்களின் தேசிய இனங்கள் பாசிச பார்ப்பனியத்தின் கொடுநெறியை முழுமையாக விளங்கிக் கொண்டு பாஜகவை எதிர்த்திடுவதாக உணரமுடியவில்லை..

அவர்களின் எதிர்ப்பு தேர்தலுக்காக பாஜகவின் எதிர்ப்பு என்கிற அளவோடு நிற்கிறது.. பாஜகவின் அரசியல் கோட்பாடான பாசிச பார்ப்பனியத்தை வீழ்த்தும் திட்டத்தோடேயே பாஜகவை வீழ்த்த முடியும் என அவர்கள் விளங்கிக் கொண்டாக வேண்டும்..

மம்தா பேனர்ஜியும், அரவிந்த் கெஜ்ரிவாலும்கூட அந்த வகையில் ஆரியப் பார்ப்பனியத்தை எதிர்த்திடும் கோட்பாட்டைக் கூர்மைப்படுத்திக் கொள்ளவேண்டும்.

காங்கிரசுக்கும் ஆரியப் பார்ப்பனிய எதிர்ப்பு இனிமேலாவது கட்டாயத் தேவை.

பாசிச பார்ப்பனியத்தின் எதிர்ப்பு என்பது பாஜகவைத் தேர்தலில் தோற்கடிப்பது என்றளவில் மட்டுமே இருந்தால் போதாது..

பாசிச பார்ப்பனியத்தை எதிர்ப்பதும் வீழ்த்துவதும்.. பாஜகவைத் தேர்தலில் தோற்கடிக்க வைப்பதையும் தாண்டித் தேவைப்படுகிறது.

தேசிய இனங்களாக உருக்கொண்டு உரிமைகளுக்குப் போராடி வருகிற மாநிலங்களின் தன்னாட்சி அதிகாரப் போராட்டங்களை முன்னெடுப்பதிலும்.. போராடி அவற்றைப் பெறுவதின் மூலமாகவும் அது இயலக்கூடியது..

ஆர் எசு எசு - பாஜகவை எதிர்க்கும் அளவிற்கு, பாசிச பார்ப்பனியத்தை எதிர்ப்பதோடு மாநில(தேசிய இன)ங்களின் தன்னாட்சி அதிகாரங்களுக்கு பொதுவுடைமைக் கட்சிகளும் முதன்மை கொடுத்தாக வேண்டும்.. அதை முன்னெடுத்துப் போராடவும் வேண்டும்..

திமுக தாங்கள், கடந்த காலங்களில் இறுதியாக முன்னெடுத்த 'மாநிலத் தன்னா(சுயா)ட்சி'க் கோரிக்கையையாவது மிக வலுவாக முன்னெடுத்தாக வேண்டும்..

அதை மற்ற மாநிலங்களின் கட்சிகளுக்கும் புரிய வைக்கவும் வேண்டும்..

அந்த வகையில் பாசிச பார்ப்பனிய எதிர்ப்பையும் மாநிலத் தன்னாட்சி அதிகாரங்களை வலுப்படுத்துகிற கருத்து கொண்டதாகவும் 'இந்தியா கூட்டணி' இருப்பதே அதன் வளர்ச்சிக்குக்கூட நல்லது.

பாஜக□வை எதிர்ப்பதும், பாசிச பார்ப்பனியத்தை எதிர்ப்பதுமே இந்தியா கூட்டணியின் கொள்கை கோட்பாடாக இருந்தாக வேண்டும்.

'சனநாயகம் வேண்டும்' - என்று 'இந்தியா கூட்டணி'யின் கட்சிகள் முன்னெடுப்பதில் அது மக்களின் சனநாயகமாகவும் இருக்கவேண்டும். மாநிலங்களின் சனநாயகமாகவும் இருக்க வேண்டும் என்கிற புரிதல் வேண்டும்..

இன்றைக்கு இருக்கிற சனநாயகம் என்பது முதலாளிகளுக்கான சனநாயகமாக சாதி மத அதிகார உணர்வினர்களுக்கே உரிய சனநாயகமாகவே உள்ளது. மாறாக அது மக்கள் சனநாயகமாக மாற வேண்டுமானால் அதற்கு வழி வகுக்கிற மொழித் தேச மாநிலங்களின் சனநாயகமாகவும் இருக்க வேண்டும்..

மாநிலங்களின் சனநாயகம் என்பது மாநிலங்கள் முழு அதிகாரங்களைக் கொண்டதாக இருந்தால் மட்டுமே முடியும்..

மாநிலங்கள் தங்களுக்கான அதிகாரங்கள் இல்லாத நிலையில், பாசிச பார்ப்பனிய இந்திய அரசின் பிடியின் கீழ் அடங்கிக் கிடக்கவே வேண்டியிருக்கும்..

எனவே, **பாசிச பார்ப்பனியத்தை வீழ்த்துகிற இலக்கோடு பாஷகவை எதிர்க்கிற முயற்சியே பாசிச பார்ப்பனியத்தை மட்டுமன்றி பாஷகவையும் வீழ்த்தும்..**

பாஜக கொண்டிருக்கிற பாசிச பார்ப்பனியம் என்பதற்குச் சனாதனம், இந்துத்துவம் என்கிற சொல்லாடல்கள் தரும் பொருள்கள் மட்டுமே போதுமானவையாகப் புரிந்து கொள்ள முடியாது..

வேதங்கள், மனு தர்மம் உள்ளிட்ட சாஸ்திரங்கள், வைதீகப் புராணங்களை, சமசுக்கிருத மேலாதிக்கத்தை, அவற்றின்வழியான சடங்குகளைத் தலைமேல் வைத்துக் கொண்டாடுவதைத் தூக்கியெறிந்து விட்டுப் பார்ப்பனியத்தை முற்றும் முழுமையாகக் கருத்தளவிலும் நடைமுறை அளவிலும் எதிர்க்கிற அடிப்படையோடு, சாதி, வருண வேறுபாடுகளை முற்றிலுமாக எதிர்ப்பதே பார்ப்பனிய எதிர்ப்பு எனப் புரிந்து கொள்ள வேண்டும்..

அதேபோல்..

அம்பானி, அதானி உள்ளிட்ட பன்னாட்டு முதலைகளோடு அவற்றின்

கொள்ளையடிப்புகளுக்காகப் பார்ப்பனிய அதிகாரம் அவற்றுடன் பிணைந்துகொண்டு அமைத்திருக்கிற இந்திய அரசு அதிகார வெறியே பாசிச பார்ப்பனியமாக உருக்கொண்டிருக்கிறது என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்..

எனவே, இங்கு அடிப்படையில் இரண்டு பெரும் கடமைகள் உண்டு..

பார்ப்பனிய அதிகாரத்தை மேற்சொல்லப்பட்ட முறைகளில் எதிர்ப்பதும்,

அம்பானி அதானி உள்ளிட்ட பன்னாட்டு முதலைகளின் சூறையாடல்களை விரட்டுவதுமான வகையில் பாசிச பார்ப்பனிய எதிர்ப்பு இரண்டு நிலைகளில் கடமையாற்ற வேண்டி இருக்கிறது..

அம்பானி அதானி உள்ளிட்ட பன்னாட்டு முதலைகளை அடியோடு எதிர்க்கிற உணர்வோடும் அந்தந்தத் தேசிய நலன் சார்ந்த தற்சார்புப் பொருளியலைப் பேணுகிற உணர்வோடும் மாநிலங்களின் தன்னாட்சி அதிகாரத்தை அந்தந்த மாநில உழைக்கும் மக்களின் உரிமை வாழ்வோடு சேர்த்து முன்னெடுக்க வேண்டியுள்ளது..

இந்நிலையில்..

திமுக உள்ளிட்ட கட்சிகள் முன்னெடுத்திருக்கிற இந்தியா கூட்டணி - என்பது குறைந்த அளவு பாஜகவைத் தோற்கடிப்பதற்குரிய அளவிலாவது தெளிவான கொள்கையை, திட்டங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

திமுக அதன் தொடக்கக் காலங்களில் கொண்டிருந்த பார்ப்பனிய எதிர்ப்புக் கொள்கைகள் சிலவற்றை இப்போது பேசுவதன் வழி பாஜக எதிர்ப்பை வலுப்படுத்துகிறது.. ஆனால் அந்த அளவில் கூட இந்தியா கூட்டணியில் உள்ள பிற கட்சிகள் பேசிடவில்லை.. அப்படியான கொள்கைகள் அவற்றுக்கு இல்லை..

தமிழ்நாட்டில் ஆரியப் பார்ப்பனியத்திற்கு எதிரான தமிழிய அறக்கருத்துகள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வேரூன்றி இருக்கிற நிலையில் அந்த வாய்ப்பைத் திமுக பயன்படுத்திக் கொள்ள முடிகிறது..

பிற மாநிலங்களில் அத்தகைய ஆரியப் பார்ப்பனியத்திற்கு எதிரான கருத்துகள் கோட்பாடுகள் அளவில் சமயங்களாகவோ கட்சிகளாகவோ இல்லாததால் அந்தந்த மாநிலக் கட்சிகளால் பார்ப்பனிய எதிர்ப்பை வலுவாக முன்னெடுத்து இயக்கப்படுத்த முடியவில்லை..

பார்ப்பனியத்திற்கு மாற்றான கோட்பாடு என்கிற வகையில் அவர்களுக்கு இசுலாம் மட்டுமே நிற்கிறது. எனவே மிக எளிதாக ஆர்.எசு.எசு-ம் பாஜகவும் பார்ப்பனிய அதிகாரத்தை இந்துத்துவம் என்கிற போர்வை போர்த்தி அதற்கு எதிரானது இசுலாம் என்று இசுலாமிய எதிர்ப்பை வலுப்படுத்திப் பார்ப்பனியத்தை இந்து என்கிற போர்வையில் நிலைப்படுத்தி இருக்கிறது..

எனவே, பிற மாநிலங்களில் உள்ள பாஜக எதிர்ப்பாளர்களால் பார்ப்பனிய எதிர்ப்பை வலுவாகக் கோட்பாட்டோடு அடையாளப்படுத்தி நிறுத்தி இயக்கப்படுத்தவோ கட்சிகளை உருவாக்கிக் கொள்ளவோ இயலவில்லை..

இந்தச் சூழலைத் திமுக சரியாக விளங்கிக் கொள்ள வேண்டும்..

பார்ப்பனியத்திற்கு எதிராகத் தமிழிய அறக்கருத்துகளைப் பிற மாநிலங்களிலும் பரப்புகிற முயற்சியின் வழியாகப் பார்ப்பனிய எதிர்ப்பை அங்கெல்லாம் வலுப்படுத்தியாக வேண்டும்..

பொதுவுடைமைக் கட்சிகள் பார்ப்பனியத்திற்கு எதிராக மார்க்சியக் கோட்பாட்டை வலுவாக பரப்புகிற முயற்சியை இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின் தோற்றக் காலத்திலிருந்தே முன்னெடுத்திடவில்லை.. அவை முதலாளியத்திற்கு எதிராகக் கருத்து பரப்பிய அளவிற்குப் பார்ப்பனியத்திற்கு எதிராகக் கருத்துகளைப் பரப்பிடவில்லை..

வேத, சாத்திர, புராணங்களை அவை எதிர்த்துக் களம் காணவில்லை.. சமசுகிருதத் திணிப்புக்கு எதிராகப் பண்பாட்டுப் புரட்சியை வலுப்படுத்த வில்லை..

வட நாடுகளில் உள்ள மாநிலங்களில் அவ்வாறு முன்னின்று செய்ய முயன்ற புத்த சமயக் கோட்பாடுகளையும் ஆரியப் பார்ப்பனியம் உட்புகுந்து கெடுத்துச் சிதைத்துவிட்டதை வரலாறு நெடுக பார்க்கலாம்..

எனவே, வடமாநிலங்களைப் பொறுத்த அளவில் அவர்களுக்குப் பார்ப்பனிய எதிர்ப்பு என்பது கோட்பாட்டளவில் வலுவாக இல்லை..

இந்த இடத்தில்தான் வட மாநிலங்களுக்குத் திருவள்ளுவரும், வள்ளலாரும், பெரியாரும், அம்பேத்கரும் தேவைப்படுகின்றனர்.. மார்க்சியம் மட்டுமே அந்த மாநிலங்களுக்குள் பரப்பலுக்குரிய போதுமான கோட்பாடாக இல்லாததற்கு பொதுவுடைமைக் கட்சிகளின் கடந்தகால விடுபாடுகளே காரணம் என்பதை ஆழ்ந்து ஆய்வு செய்தால் உணர முடியும்..

ஆக,

பாஜகவை பாசிச பாஜக என்று மட்டுமே பொதுப்பட உணர முடிகிற வடமாநிலக் கட்சிகளிடம்.. இந்திய ஆட்சி அதிகாரமே இன்றைக்குப் பாஜகவின் வழியாகப் பாசிச பார்ப்பனிய முகத்தோடு இயங்குகிறது என்பதை அரசியல், மெய்யியல் அளவில் விளங்க வைத்தாக வேண்டியிருக்கிறது..

தமிழ்நாட்டளவில்தான் நாம் செய்யமுடியும் என்றாலும், ஒத்தக் கருத்துடைய பிறமொழி மாநிலச் செயற்பாட்டு இயக்கங்களுக்கு இத்தகைய அரசியல் மெய்யியல் தெளிவுகொடுத்து அணியப்படுத்தவும் வேண்டியிருக்கிறது. பரந்துபட்ட இந்தியப் பார்ப்பனிய வல்லாட்சி அரசை வீழ்த்துவதற்குப் பிற மொழி மாநில எழுச்சிகளோடு கூட்டமைப்பாய் அணிசேர்வதும் தேவையானதாகிறது.

அத்தகைய முயற்சி மிகப்பெரிய வலுவான முயற்சி..

ஆனால் அதைச் செய்யாமல் பாசிச பார்ப்பனியத்தை எளிதாக வீழ்த்திவிட முடியாது..

பாஜகவை வீழ்த்துவது ஏதோ தேர்தல் அளவிலான தேர்தல் வெற்றிக்கான கட்சிக் கூட்டணிகளை அமைத்துக் கொள்வதோடு செய்ய வேண்டிய செயல் மட்டுமே அல்ல...

அதைக் கடந்து கொள்கை அளவில் மிகப் பெரும் அடித்தள முயற்சியோடு பாசிச பார்ப்பனிய எதிர்ப்பை மிக வலுவாகப் பரப்புகிற, மக்களுக்கு எடுத்து விளங்க வைக்கிற, திட்டமிட்டு அமைப்பாக்குகிற பெரு முயற்சியோடு செயல்பட்டாக வேண்டும்..

அதற்கு..

இந்தியா கூட்டணி என்பது மிகவும் தேவையானதானாலும் அது மட்டுமே போதுமானதாகாது..

இந்திய சனநாயகத்தை வெல்ல வைக்கப் போவதான கருத்து அறிவிப்புகளும் போதுமானவையாகாது..

இந்திய அரசியல் சட்டத்தைக் காப்பாற்றுவதன் மூலம் பாஜகவை எதிர்க்கலாம் என்கிற கருத்தும் போதுமான புரிதலை ஏற்படுத்தி விடாது..

பார்ப்பனியத்தை..

அதுவும் இன்றைக்குப் பாசிச வெறியோடு வளர்ந்து விட்டிருக்கிற பாசிச பார்ப்பனியத்தை வீழ்த்துகிற ஒரு மிகப்பெரும் திட்ட முயற்சி தேவை என்பதை அனைத்து இயக்கங்களும் அனைத்துக் கட்சிகளும் உணரத் தகுந்த வகையில் கருத்து வலுவாகப் பரப்பப்படுவதும் செயல்பாடுகள் மிக வலுவாக வளர்க்கப்படுவதும் தேவையாகிறது..

அதாவது பாசிச பார்ப்பனியத்தின் கொடூர அடையாளத்தை வெளிப்படுத்திப் பரப்புவதும், அதை எதிர்மையாக நிறுத்தி அனைத்து அணிகளையும் ஓரணியில் நிறுத்துவதும், அவற்றை அரசியல் படுத்திப் போராட வைப்பதுமான பெரு முயற்சி அது.

அத்தகைய முயற்சிகள் என்பன எல்லா தளங்களிலும் நடத்தப்பட்டாக வேண்டும். தேர்தல் அரசியல் களத்தில் இந்தியா கூட்டணி பாசிச பார்ப்பனியத்தை எதிர்க்கும் தன்மையினதாக, மாநில உரிமைகளை முன்வைத்துப் பரப்பல் செய்வதாக, போராடுவதாக இருக்க வேண்டும். அதேபோல் தேர்தல் அரசியல் களத்திற்கு வெளியே குமுக இயக்கங்களும், குமுக அளவில் புரட்சிவழி மாற்றம் தேடும் இயக்கங்களும் திட்டமிட்ட இலக்கோடு மாநிலங்கள் அளவில் கூட்டணி அமைத்துச் செயல்படுவதோடு, மாநிலங்களுக்கு இடையேயும் கூட்டணி உறவுகள் அமைத்து விரிவாகச் செயல்பட்டாக வேண்டும்.

அத்தகைய முயற்சியாகவே..

தமிழக மக்கள் முன்னணி அத்தகைய நோக்கத்திலேயே பாசிச பார்ப்பனிய எதிர்ப்பை முன்னெடுத்து மாநாடாக அறிவிக்கிறது..

அதன் அழுத்தத்தைத் தமிழக கட்சிகள் இடையே இயக்கங்கள் இடையே பரப்புகிற பெரு முயற்சியாகவே பாசிச பார்ப்பனிய எதிர்ப்பு மாநாடு அறிவிக்கப்பட்டிருக்கிறது..

எனவே,

இந்துத்துவ எதிர்ப்பு, சனாதன எதிர்ப்பு, சனநாயகமின்மை எதிர்ப்பு, அரசியல் சட்டச் சீரழிப்பு எதிர்ப்பு என்றெல்லாம் எதிரிகளின் கோரமான வெறிமுகத்தை அடையாளப்படுத்திக் காட்டிப் பரப்பல் செய்வதோடு,

பளிச்சென்று..

பாசிச பார்ப்பனியத்தை எதிர்ப்போம் என ஓங்கி முழங்கியாக வேண்டும்..

அதற்கு எதிராய்த் தமிழ்நாட்டை அணியப்படுத்த வேண்டும்!

மொழிவழி மாநிலங்களை விழிப்படைய வைத்து எழுச்சி கொள்ள வைக்கவும் வேண்டும்.

அவற்றையெல்லாம் இணைத்து ஒரு பெரும் கூட்டணியையும் அமைத்தாக வேண்டும்.

அதுவே இன்றைய சூழலுக்கு முதன்மையானது என உணர்வோம்!.. பறைசாற்றி உரைப்போம்!..

**.. பொழிலன்**

# பாசிசம் - நாசிசம் - பார்ப்பனியம்: பாசிச பார்ப்பனியத்தை எதிர்கொள்ள ஒருங்கிணைவோம்!

**பேராசிரியர் த. செயராமன்**
நெறியாளர், தமிழ்மண் தன்னுரிமை இயக்கம்

முதல் உலகப் போர் (1914 - 1918) மற்றும் இரண்டாம் உலகப் போர் (1939 - 1945) ஆகியவற்றுக்கு இடையே ஐரோப்பாக் கண்டத்தில் எழுச்சி பெற்ற இரண்டு சர்வாதிகார வடிவங்கள் உலகையே திகைப்புற வைத்தன. அவை நிகழ்த்திய கொடுமைகள் இன்றளவும் பேசப்படுகின்றன. அவை நாசிசமும் பாசிசமும் ஆகும்.

இத்தாலியில் 1922 அளவில் எழுச்சி பெற்ற அரசியல் அதிகாரவெறி பிடித்த தேசிய பாசிசுடுகளின் தலைவர் பெனிடோ முசோலினி 1922 முதல் 1943 வரை இத்தாலியின் பிரதமராகவும், அதன் பிறகு டியூஸ் எனப்படும் தலைவராகவும் விளங்கிய சர்வாதிகாரி. முதல் உலகப்போரின் இறுதியில் இத்தாலியின் அதிதீவிர தேசியவாதம் பாசிசமாக எழுந்தது. வன்முறை மூலம் தொழிற்சங்கங்கள், இடதுசாரிகள், சோசியலிசுடுகள், கத்தோலிக்க நாடாளுமன்றவாதிகள் என அரசோடு முரண்படும் யாரையும், எதனையும் விட்டு வைக்காமல் அழித்தது. இத்தாலியின் சர்வாதிகாரியாகவும் பாசிசத்தின் முதன்மை நிறுவனராகவும் விளங்கிய பெனிடோ முசோலினி இத்தாலிய தேசியவாதத்தின் கொடூர வெளிப்பாடு. 1922ல் இத்தாலிய பிரதமராக ஆன முசோலினி, இத்தாலி நேச நாடுகளிடம் சரணடைந்த பிறகு, 1945 - இல் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அதேபோன்று ஐரோப்பாவில் முதல் உலகப் போருக்குப் பிறகு எழுச்சி பெற்ற மற்றொரு பாசிச வடிவம் நாசிசம் ஆகும். தேசியம் என்ற பெயரில் எழுச்சி பெற்று, தன்னோடு முரண்படுகிற எவரையும் விட்டு வைக்காத பாசிசத்துடன் ஜெர்மானிய ஆரிய இனவெறியும் சேர்ந்து நாசிசம் என்ற வடிவம் பெற்றது. ஜெர்மனியில் அடால்ஃப் ஹிட்லர், நாசி என்ற தேசியவாத கட்சியின் தலைவர். அவர் ஜெர்மனியின் பிரதமரானார். 1934 முதல் 1945 வரை ஜெர்மனியின் சர்வாதிகாரத் தலைவராக விளங்கினார். 1939இல் போலந்து மீது படை எடுத்து இரண்டாம் உலகப்போரைத் தொடங்கி வைத்தார். ஹிட்லரின் நாசிச கொள்கையாளர்கள் 6 மில்லியன் யூதர்களைப் படுகொலை செய்தார்கள். 1945 - இல் ஹிட்லர் தற்கொலை செய்து கொண்டார்.

ஹிட்லரின் நாசிசத்தையும், முசோலினியின் பாசிசத்தையும்தான் மிகப்பெரும் சர்வாதிகாரங்களாகவும், அதிகார வெறி, இனவெறிக் கொடூரங்களுக்கு சான்றுகளாகவும் உலகம் வியந்து பேசிக் கொண்டிருக்கிறது. அவர்கள் 2000 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியத் துணைக்கண்டத்தில் பார்ப்பனியம் இழைத்து வரும் விவரிக்க முடியாத கொடூரங்களைப் பற்றி அறியாதவர்கள்.

* பாசிச பார்ப்பனியம் என்பது முசோலினியின், ஹிட்லரின் பாசிச நாசிசத்தை விடக் கொடுமையானது.
* தேசியம், தேச நலன், தேசப் பெருமிதம், பாரம்பரியம் என்ற பெயரில் ஓர் அதிகார வர்க்கத்தை உயர்த்திப் பிடிக்கும் ஆதிக்கவாத கருத்தியலே பாசிசம்!
* தனிமனித உரிமை, மக்கள் உரிமையை நாட்டு நலன் என்ற பெயரில் நசுக்குவது; முதலாளித்துவத்தை உயர்த்திப் பிடிப்பது; அரசின் மேன்மைக்கு குடிமக்கள் எதையும் இழக்கத் தயாராக இருக்க வேண்டும் என்று கற்பிப்பது; ஓர் அதிகார வர்க்கத்திடம் ஆட்சி அதிகாரங்களைக் குவித்துக் கொள்வது, பெருமுதலாளிய நலனுக்குப் பாதுகாப்பாக தொழிலாளர்களை, எளியோரை ஒடுக்குவது, உரிமைகளைப் பறிப்பது, அரசோடு முரண்படுபவர்களை இல்லாதொழிப்பது; இதுவே பாசிசம்...
* பாசிசத்துடன் கூடுதல் கூறாக இனவெறியைச் சேர்த்தது நாசிசம்! ஆரிய இனமே உயர்ந்தது; உலகை ஆளத் தகுதியானது; ஆரிய மேன்மை நிறுவப்பட வேண்டும்; மற்ற இனங்கள் அழிக்கப்பட வேண்டும் என்ற ஹிட்லரின் ஆரிய இனவெறிக் கொள்கையே நாசிசம்.
* நாசிசத்தின், பாசிசத்தின் சர்வாதிகாரத்தையும் ஒடுக்குமுறையையும் அதன் அதிகார இனவெறி தத்துவத்தையும்விட கூடுதல் கொடுமையானது பார்ப்பனியம்...
* வேத சாத்திரங்களின் பெயரால், கடவுளின் பெயரால், புனித சாத்திரங்களின் பெயரால், மக்கள் அடிமைத்தனத்தை ஏற்கச் செய்யும் வஞ்சகம் ...
* வேதம் காட்டிய வழி, சனாதன சட்டம் வகுத்த வாழ்வுமுறை, வர்ண - சாதி சமூகக் கட்டமைப்பு குலையாமல் காக்கும் தந்திரம்;

சாதிய சனாதன அடுக்கமைவு படிநிலையின் நிரந்தர மேலடுக்காக தங்களை நிலைநிறுத்திக் கொள்ள மற்றவர்களை இந்துவாக உணரச் செய்யும் தந்திரம்;

சனாதனத்தை கட்டிக் காக்கும் பொறுப்பை அடுத்தடுத்த படிநிலைச் சாதிகளிடம் வழங்கியுள்ள சமூகக் கட்டமைப்பு ஏற்பாடு;

ஒவ்வொருவருடைய தகுதி, வாழ்விடம், உண்ண அனுமதிக்கப்பட்ட உணவு, அணிய வேண்டிய உடை, செய்ய வேண்டிய தொழில், சமூகத்தில் வகிக்கும் பாத்திரம், அனுபவிக்கும் உரிமைகள், மறுக்கப்பட்ட உரிமைகள், திணிக்கப்பட்ட கடமைகள் என அனைத்தையும் பிறப்பின் அடிப்படையில் வகுத்து, சாத்திரங்களின் அடிப்படையில் சான்று காட்டி, புனிதம் என்று போதித்து, கடவுளின் பெயரால் அச்சுறுத்தி, காலங்காலமாக நடைமுறைப்படுத்தி வரும் நயவஞ்சகத் தந்திரத்துக்குப் பார்ப்பனியம் என்று பெயர்.

பாசிசத்தில் எளியவன் ஒருவன் அதிகார வர்க்கத்திற்கு மாற முடியும்! நாசிசம் தன் இனத்தவனைக் கொடுமைபடுத்தவில்லை; மாற்று இனத்தையே அழித்தது. ஆனால், பார்ப்பனியம் மாற்று இனம் - தன் இனம் என்று பார்ப்பதில்லை! பார்ப்பனர் தவிர வேறு எந்த வருணத்தாரையும் தனக்கு இணையாக வாழவிட்டதில்லை! எந்தக் கீழடுக்கு சாதியையும் மேன்மையுற அனுமதித்ததில்லை! வருண - சாதி அடுக்கில் உள்ள கீழ்நிலை வருணங்களையும் சாதிகளையும் தனக்குச் சேவை செய்ய வைப்பதில் பார்ப்பனியம் இன்றளவும் வெற்றி கண்டிருக்கிறது.

பார்ப்பனியம் தன் ஆரிய இனத்துக்குள்ளும் பார்ப்பனருக்குக் கீழ் உள்ள மூன்று வருணங்களையும், வருணங்களுக்குள் இருக்கும் சாதிகளையும் அடிமைப்படுத்தி சேவை செய்ய வைத்திருக்கிறது. பிறப்பிலேயே ஒருவனை ஆண்டான் என்றும், அடிமை என்றும் ஒரு காலத்திலும் மாற்ற முடியாதபடி வரையறுக்கிறது. இந்த வரையறுப்பு நிலையானது; மாறாதது; தெய்வீகமானது; புனிதத் தன்மையுடையது என்று கற்பிக்கிறது.

கடவுள், வேதம், சாத்திரத்தின் பெயரால் கொடுமைகளை ஆண்டாண்டுக் காலமாய் நிலைநிறுத்தி வருகிற சமூக ஒடுக்குமுறைத் தத்துவம்தான் பார்ப்பனியம்!

ஐரோப்பாவில் நாசிசமும் பாசிசமும் 25 ஆண்டுகள் மட்டுமே ஆதிக்கம் செலுத்த முடிந்தது. ஆனால், இந்தியத் துணைக் கண்டத்துப் பாசிச வடிவமான பார்ப்பனியம் 2000 ஆண்டுகளாக ஆதிக்கம் செலுத்தி வருகிறது.

ஆரியப் பார்ப்பனியம் இன்று இந்தியத் தேசியமாக வடிவம் கொண்டுள்ளது. இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள பல தேசிய இன மக்களையும், இந்திய தேசப்பற்று என்ற பெயரில் மூளைச்சலவை செய்து வைத்திருக்கிறது. இந்தியத் துணைக்கண்டத்தில் வரலாற்றுவழி வளர்ந்து தனித்தனி இன அடையாளங்களைக் கொண்டுள்ள 30-க்கும் மேற்பட்ட தேசிய இனங்களின் அடையாளங்களையும், மொழிகளையும் ஒழித்துக் கட்டுகிற வெறியோடு பார்ப்பனியம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே வரி, ஒரே பண்பாடு என்று பேசுகிறது.

இதற்காக, இனங்களின் வரலாறுகளை முற்றுமுதலாய்த் தலைகீழாகத் திரித்து, ஆரிய - பார்ப்பனிய வரலாறையே இந்திய வரலாறாக நிலை நிறுத்துகிறது.

அனைத்துத் தேசிய இனங்களின் மொழிகளையும் அழித்துவிட்டு, சமசுக்கிருத - இந்தி மொழியை மட்டுமே அதிகார மொழியாக, "தேசிய மொழி"யாக நிலைப்படுத்தும் வேலையைச் செய்கிறது.

பார்ப்பனியத்தின் பாதுகாவலர்களான அம்பானி, அதானி உள்ளிட்ட பார்ப்பனச் சார்பாளர்களின் பொருளாதாரப் பேரரசுகளை நிறுவத் துணை நிற்கிறது. இந்தியத் துணைக் கண்டத்தின் அனைத்து வளங்களையும், இயற்கை வளங்களையும், தொழில்களையும், வணிகத்தையும், உழவையும், பார்ப்பனியப் பாதுகாவலர்களான பெருமுதலாளிகளுக்குத் தாரை வார்க்கிறது! தேசிய இனங்களின் எளிய மக்களை, நேரடி வரி, சரக்கு - சேவை வரி, சுங்க வரி, நீருக்கும்,சோறுக்கும் மருந்துக்கும் வரி, வாழ்வியல் கூறுகளின் ஒவ்வொன்றின் மீதும் வரி என்று சாறு பிழிந்து, அவர்களை நிரந்தர ஏழ்மையில் நிறுத்துகிறது.

தேசிய இனத் தாயகங்களின் இருப்பையே மறுக்கிறது; வரலாற்றுவழி தேசிய இனத் தாயகங்களை சிதைக்கிறது; மாநில அரசுகளின் அனைத்து உரிமைகளையும் அதிகாரங்களையும் பறிக்கிறது; ஒன்றிய அரசு என்ற பெயரில் முற்றதிகாரத் திமிரோடு இயங்குகிறது.

ஆரியப் பார்ப்பனியத்தின் மேலாதிக்கத்தை நிரந்தரப்படுத்தும் நோக்கத்தோடு 1925 - இல் உருவாக்கப்பட்ட அமைப்புதான் ராஷ்டிரிய சுயம் சேவக் சங் என்கிற ஆர்.எசு.எசு. ஹிட்லர் மற்றும் முசோலினியை ஆதரித்தவர்கள் இவர்கள். ஹிட்லரின் "சுவஸ்திக்" கொடியையே தமது கொடியாக ஏற்ற அந்த ஆரிய மதவெறி பார்ப்பன அமைப்பு, இன்று தன் நூற்றாண்டுக் கனவான இந்துராஷ்டிரத்தைப் படைக்கும் இலக்கு நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. 1931 - இல், ஆர். எஸ்.எஸ். அமைப்பை

உருவாக்கியவர்களில் ஒருவரான பி.எஸ். மூஞ்சே, இங்கிலாந்தில் வட்டமேசை மாநாட்டுக்குச் சென்றுவிட்டு, இத்தாலி சென்று முசோலினியைச் சந்தித்து 3 மணி நேரம் உரையாடியவர். 1934 - இல் "பாசிசமும் இத்தாலியும்" என்ற கருத்தின் அடிப்படையில் மாநாடு போட்டவர்கள் இவர்கள். பார்ப்பன மேலாண்மையை நிறுவும் அரசியல் திட்டமான இந்துத்துவம் என்னும் வன்கொடுமைத் தத்துவத்தை இந்தியாவில் உள்ள அனைத்து இந்து மக்களுக்கான தத்துவமாகக் காட்டி, இந்துத்துவ இந்தியாவைப் படைக்கக் காய்களை நகர்த்தி வருகிறது. ஆர்.எசு.எசு. இந்துராஷ்டிரத்தைப் படைக்க, இவர்களுடைய குருஜி கோல்வால்கர் கூறியதை நடைமுறைப்படுத்த முயற்சி செய்கிறது. "இனம், பண்பாடு ஆகியவற்றின் தூய்மையைக் காப்பாற்றுவதற்காக ஜெர்மனி யூதர்களை அழித்தொழித்தது போல", இசுலாமியர்கள், கிறித்தவர்கள் என்ற சிறுபான்மை மதத்தவர்களை அழித்தொழிப்பதை ஆர்.எசு.எசு நியாயப்படுத்துகிறது. இசுலாமிய, கிறித்தவர்கள் "இந்து" என்ற தேசிய இனத்தோடு ஒன்றிணைந்து, அதன் பண்பாட்டை ஏற்றுக் கொள்ள வேண்டும்; அல்லது அனுமதிக்கும் வரை இங்கே வாழ்ந்துவிட்டு இந்தியாவை விட்டு வெளியேறிவிட வேண்டும் என்று அறிவிக்கிறது. "தாய் மதத்திற்குத் திரும்பு" என்று எச்சரிக்கை செய்கிறது.

ஆரியப் பார்ப்பனியத்தின் இந்தக் குரல் தமிழ்நாட்டிலும் எதிரொலிக்கிறது. ஆரியப் பார்ப்பனியத்தின் ஆர்.எசு.எசு-இன் முகவர்கள் "தாய் மதம்" திரும்பக் கோருகிறார்கள். 1925 - இல் ஆர்.எசு.எசு எந்த இலக்குக்காக நிறுவப்பட்டதோ, அந்த இலக்கான இந்துராஷ்டிரத்தை, அதன் நூறாவது ஆண்டாகிய 2025க்குள், அல்லது ஆர்.எசு.எசு.-இன் தலைவர் மோகன் பகவத் கூறுவதைப் போல, இன்னும் 15 ஆண்டுகள் கூடுதலாக எடுத்துக் கொண்டு, நிறுவ இலக்கு நிர்ணயித்து செயல்பட்டு வருகிறது.

இந்திய நாட்டின் அனைத்து மாநிலங்களிலும் ஒவ்வொரு பிரிவினரையும் தன்னுடைய திட்டத்தை ஏற்கச் செய்ய அனைத்துத் தளங்களிலும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்தியாவின் கல்வி - ஆராய்ச்சி - மற்றும் பயிற்சிக்கான தேசியக் கவுன்சில் (NCERT), இந்திய வரலாற்று மன்றம் (ICHR), இந்திய பல்கலைக்கழக நல்கைக் குழு (UGC) ஆகியவை ஆர் எசு எசு - இன் தலைமையின் கீழ் நடக்கின்றன.

பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் படித்துக் கொண்டிருக்கக் கூடிய குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் முழுமையான சங்கிகளாக வெளிவரும் வகையில் பாடத்திட்டங்கள் வடிவமைக்கப்படுகின்றன. தேசிய கல்விக் கொள்கை என்ற பெயரில் வருணாச்சிரம கல்விக் கொள்கை புகுத்தப்பட்டுவிட்டது. இந்தியும் சமசுகிருதமும் மூன்றாம் வகுப்பிலிருந்து மூளைக்குள் புகுத்தப்படுகின்றன.

இந்திய இராணுவத்தின் தலைமை, இந்தியாவில் அனைத்து மாநிலங்களிலும் உள்ள காவல்துறையில் முக்கிய பொறுப்புகள் அனைத்தும் ஆர்.எசு.எசு அமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. நீதித்துறையிலும் கூட ஆர்.எசு.எசு. ஊடுருவி விட்டது. ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ். அதிகாரிகள் இன்று ஆர்.எசு.எசு சார்பாளர்களாக மாறி இருக்கிறார்கள். இந்திய நாடாளுமன்றத்தில் மக்களவையில், ஆர்.எசு.எசு - இன் அரசியல் பிரிவான பாரதிய ஜனதா கட்சிக்கு மட்டும் 303 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். சர்வாதிகாரச் சட்டங்களை ஜனநாயக முறையைப் பயன்படுத்தியே இன்று கொண்டு வர முடியும் என்ற வலுவான நிலையில் ஆர்.எசு.எசு இருக்கிறது.

இந்தியப் பண்பாடு என்ற பெயரில் ஆரியப் பண்பாட்டு வல்லாண்மை நிறுவப்படுகிறது. ஆரிய இன மேலாதிக்கத்தை, மேல்சாதி ஆதிக்கத்தை நிலை நிறுத்தும் கருத்துகள் பல்வேறு ஊடகங்கள் மூலம் ஊட்டப்படுகின்றன. வர்ண - சாதி அடுக்குமுறையை ஏற்கும் உள நிலை இடைநிலைச் சாதிகளிடம் தோன்றியிருக்கிறது. சாதிப் பெருமை ஊட்டப்படுகிறது., அரிவாள்களால் சக மாணவர்களைத் தாக்கும் அளவிற்கு பள்ளிச் சிறுவர்கள் சாதிய உணர்வால் ஆட்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

பார்ப்பனியத்தின் முகவர்களாக பல்வேறு சாதித்தலைவர்களும், அரசியல் தலைமைகளும் மாறி இருப்பதைக் காண முடிகிறது. வர்ணாச்சிரமம், சாதிப் படிநிலை என்ற பெயரில் ஆண்டாண்டுக் காலமாக ஒடுக்குமுறைக்கு உள்ளான பல்வேறு சாதிகளைப் பார்ப்பனியம் தன் போர்ப்படையாக மாற்றி வருகிறது.

இந்திய பெருமுதலாளிய சந்தை வேட்டையும், ஆரிய இனவாதமும் கைகோர்த்து இந்திய ஏகாதிபத்தியமாக வளர்ந்து நிற்கிறது. பார்ப்பனியத்தின் அரசியல் வடிவம் இந்தியத் தேசியம்; அதன் பண்பாட்டு முகம் இந்தியம். இந்தியத் தேசியத்தை ஏற்க மறுத்தால் அதைத் தேசத் துரோகம் என்கிறது பார்ப்பனியம். பார்ப்பனியத்தை இயல்பாகவே எதிர்க்கும் தமிழினத்தை வேரறுக்கத் துடிக்கிறது. எப்படியாவது தன் நூற்றாண்டுக் கனவாகிய இந்து இராஷ்டிரத்தைப் படைத்துவிட வேண்டும் என்று பார்ப்பனியம் முயற்சிக்கிறது. அண்ணல் அம்பேத்கர் "இந்துராஜ்ஜியம் என்பது உண்மையாக அமைந்தால், அது இந்த நாட்டின் பேரழிவில் முடியும் என்பதில் சந்தேகம் இல்லை. எந்த விலை கொடுத்தாயினும் இந்து ராஜ்யத்தைத் தடுத்தாக வேண்டும்" என்று கூறியிருக்கிறார்.

ஆன்மீகத்தின் பெயரால், வேல் யாத்திரை என்ற பெயரால், தெய்வீக தமிழ்ச் சங்கம் என்ற பெயரால், பெண்களுக்கான கும்மி முதல், ஆண்கள் பங்கேற்கும் வீர விளையாட்டுகள் வரை அனைத்தையும் ஆர்.எசு.எசு கையில் எடுத்திருக்கிறது.

2016இல் ஈரோட்டில் ஆர்.எசு.எசு நான்கு நாட்கள் தேசிய மாநாடு நடத்திய பிறகு தமிழ்நாட்டில் ஷாகா (பயிற்சி நிகழ்வு) எண்ணிக்கை அதிகரித்து இருக்கிறது. பல்வேறு சமூகத் தலைவர்களும், அரசியல் ஆளுமைகளும் ஆர்எசுஎசு - இன் அன்பு வட்டத்துக்குள் வந்திருக்கிறார்கள். இந்தியா முழுவதும் "இந்து" என்ற முகத்தோடு செல்லக்கூடிய ஆர்.எசு.எசு தமிழ்நாட்டில் "தமிழ் முகத்தோடு" வருகிறது. தமிழ்மொழியை முன்னிலைப்படுத்தி பேசுகிறார்கள். தமிழ்மொழியில் சிறந்த பேச்சாளர்கள், எழுத்தாளர்கள், நடிகர்கள், நடிகைகள், அரசியல்வாதிகள் மற்றும் செயல்பாட்டாளர்களை ஆர்.எசு.எசு அமைப்பு கையகப்படுத்தியுள்ளது.

2015-இல் 10,000 ஷாகாக்கள் திட்டமிடப்பட்டு 25 ஆயிரம் ஷாகாக்கள் தமிழ்நாட்டில் நடத்தப்பட்டிருக்கின்றன. தமிழ்நாடு முழுவதும் ஆர்.எசு.எசு பேரணிகள் நீதிமன்ற அனுமதியோடு நடத்தப்படுகின்றன.

2019 - இல், உத்தரப்பிரதேசத்தில் அலிகாரில் காந்தியார் படத்தைத் துப்பாக்கியால் சுட்டு, தீ வைத்து, இனிப்பு வழங்கிக் கொண்டாடினார்கள். காந்தியின் படம்மீது செருப்புப் பதிவு வைத்து மிதியடி தயாரிக்கப்பட்டிருக்கிறது. 2021 ஹரித்வார் சன்சத் மாநாட்டில் முஸ்லிம்களை இனப்படுகொலை செய்ய வேண்டும் என்று அறைகூவல் விடப்பட்டது. பெண் சாமியார் சாத்வி விபாவோ இசுலாமிய பெண்களைப் பாலியல் வல்லுறவு செய்ய வேண்டும் என்று இந்து ஆண்களுக்குப் பாலியல் அறிவுறுத்தல் செய்திருக்கிறார். உத்தரப்பிரதேசம் சோன்பத்ரா மாவட்டத்தில் பதினோராம் வகுப்பு படிக்கும் பள்ளி மாணவர்கள், மற்றும் மகாராஷ்டிராவிலும், நாக்பூரிலும், டெல்லியிலும் மாணவர்கள் இந்து ராஜ்யம் படைப்போம் என்றும் இசுலாமியர்களைக் கொல்லுவோம் என்றும், 2022 ஜனவரி முதல் நாள் உறுதியேற்றனர். இந்தப் போக்கு நாடெங்கும் பரவி வருகிறது.

தமிழ்நாட்டில் நகரங்களில் 1400 இடங்களில் ஷாகாக்கள் நடைபெற்று வருகின்றன. தமிழ்நாட்டில் ஆர்.எசு.எசு முழுநேரப் பிரச்சாரகர்கள் 146 பேர் வேலை செய்து வருகிறார்கள். 20 மாவட்டங்களில் 25 ஆயிரம் ஏ.பி.வி.பி மாணவர்கள் செயல்படுகிறார்கள். 19 மாவட்டங்களில் பாரதிய மஸ்தூர் சங் 82 கிளைகளைத் தொடங்கி இருக்கிறது. இதில் 70 ஆயிரம் உறுப்பினர்கள் சேர்க்கப்பெற்றிருக்கிறார்கள். பாரதிய கிசான் சங்கம் அமைப்பில் 10,000 பேர் உறுப்பு வகிக்கிறார்கள். வித்யா பாரதி 100 பள்ளிகளை நடத்துகிறது. சென்னையைச் சுற்றிலும் 15 பள்ளிகள் அவர்களால் நடத்தப்படுகின்றன. நாகர்கோயில், கோவை, திருப்பூர் போன்ற நகரங்களில் பெருவளர்ச்சி பெற்றிருக்கிறார்கள். ஆர்.எசு.எசு. காரர்களின் முக்கிய செயல்பாட்டுத் தளமாக விவேகானந்தர் நினைவகம் விளங்கி வருகிறது. இந்தியாவில் 17 மாநிலங்களில் ஆர்.எசு.எசு.க்காரர்கள் ஆளுநர்களாக இருக்கிறார்கள். இந்துராஷ்டிரத்திற்குச் சார்பாகத் செயல்திட்டங்களும் பரப்புரைகளும் ஆளுநர் மாளிகையில் வகுக்கப்படுகின்றன. "இந்துச் சூழலை உருவாக்குவது" என்ற பெயரில் சிவகிரி, புளியங்குடி, ஆம்பூர், வாணியம்பாடி போன்ற இடங்களில் சாதிக் கலவரங்கள் தொடங்கி மதக்கலவரங்களாக மாற்றப்பட்டன. விளக்கு பூஜை என்ற பெயரில் மீனாட்சியம்மன் கோயிலில் பத்தாயிரம் பெண்கள் இந்துத்துவத் திட்டத்திற்கு இணக்கமாக மாற்றப்பட்டிருக்கிறார்கள். திருநெல்வேலி நெல்லையப்பர் கோயிலில் ஜெபவேள்வி நடத்தப்படுகிறது. ஐயப்பன் இயக்கம் என்றும், ஆதிபராசக்தி இயக்கம் என்றும், பழனிக்குக் காவடி எடுப்பது என்றும், திருச்செந்தூர் யாத்திரை என்றும், மகரிஷி வழிபட்ட அருணாச்சலம் மலை கிரிவலம் என்றும், வேல் யாத்திரை என்றும் பல இலட்சம் பேர் இந்துத்துவ சக்திகளால் உள்வாங்கப் படுகிறார்கள். வள்ளி கும்மி என்ற பெயரில் சில ஆயிரம் பெண்களை கும்மியடிக்கக் கற்றுக் கொடுப்பது என்ற பெயரில் அழைத்து, அவர்களை இந்துத்துவமயப் படுத்துகிறார்கள். பலரை ஈஷா மையத்திற்கு அழைத்துச் சென்று மதவாதக் கருத்தியலுக்கு உள்ளாக்குவதும், அவர்களைக் காசிக்கு அழைத்துச் சென்று இந்துத்துவத் திட்டத்தோடு இணைப்பதும் என்ற செயல்பாடுகள் தொடங்கியுள்ளன. பல்வேறு நிறுவனங்களின் கார்ப்பரேட் சோசியல் ரெஸ்பான்சிபிலிட்டி ஃபண்ட் என்ற பெயரில் மக்களின் நலனுக்குச் செலவிடப்பட வேண்டிய பெருந்தொகைகள் ஆர்.எசு.எசு. இன் செயல்பாடுகளுக்குத் திருப்பி விடப்பட்டுள்ளன. இந்திய பிரதமர் மோடி வசம் அளிக்கப்பட்ட "பி.எம்.கேர்" என்ற கொரோனா பாதிப்புகளுக்கான பண உதவி என்ன ஆனது என்பது எவருக்கும் தெரியாது. அது ஒன்றிய அரசின் நிதியத்துக்கும் செல்லவில்லை. இந்துராஷ்டிரத்தைப் படைத்துவிடச் செலவிடப்படுவதாகக் கருதப்படுகிறது.

பார்ப்பனியத்தின் எதிர் கருத்தியலாக விளங்கிய திராவிடம் என்பதைத் தமிழுக்கும் தமிழருக்கும் எதிரானது என்று ஆர்.எசு.எசு தன் முகவர்கள் மூலமாகப் பரப்புரை செய்து கொண்டிருக்கிறது. "ஆரியர் அல்லாதவர்" என்ற பொருளில் பயன்படுத்திய "திராவிடர்" என்ற சொல் தெலுங்கர்களைக் குறிப்பதாக ஆர்.எசு.எசு - இன் மறைமுக மற்றும் நேர்முகக் கூட்டாளிகள் கற்பிக்கிறார்கள். 1929 - இலிருந்து கழற்றி வீசப்பட்டுக் கிடந்த சாதிப் பெயர்களெல்லாம் இப்பொழுது மீண்டும் பெயருக்குப் பின்னால் சூட்டப் படுகின்றன. சாதிகளுக்குத் தமிழ்க் குடிகள் என்று நல்ல பெயர் சூட்டப்படுகிறது. சாதி ஆணவக் கொலைகளுக்குக் குடிப்பெருமைக் கொலை என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தன் பெயருக்குப் பின்னால் தன் சாதியைப் போட்டுக் கொள்வதில் அடுத்தவருக்கு என்ன பிரச்சனை என்று ஆர்.எசு.எசு. ஆதரவு தலைவர்கள் மூலம் மக்களிடையே கருத்துப் பிரச்சாரம் செய்யப்படுகிறது. யோகா என்றும், தெய்வ பக்தி என்றும், தேசபக்தி என்றும், ஆர்.எஸ்.எஸ் என்றும், சங்பரிவார் அமைப்புகள் என்றும், வெவ்வேறு பெயர்களில் பார்ப்பனிய சக்திகள் மக்களை அணிதிரட்டிக் கொண்டிருக்கின்றன. இந்தியாவையும் இந்து மதத்தையும் தமிழ்த் தேசிய ஆளுமைகள் கடந்த காலத்தில் எதிர்த்து வந்திருக்கிறார்கள். ஆனால் இப்போது இந்திய ஏற்பு, இந்து ஏற்பு, சாதி ஏற்பு என்ற தலைகீழ் மாற்றங்களுடன், இந்துத்துவ ஒட்டுரகமாகப் புதியவகைத் தமிழ்த்தேசியம் இங்கே பேசப்படுகிறது.

இந்துராஷ்டிரத்தை நிறுவுதல் என்பதற்குச் சனாதன வருணாச்சிரமக் கட்டமைப்பு நிறுவப்படுதல் என்று பொருள். அதன் பொருள் புரியாமல் பலர் பார்ப்பனியத்திற்குத் துணை போய்க் கொண்டிருக்கிறார்கள்.

இந்த பாசிச - பார்ப்பனியத்தை வீழ்த்தாமல் எந்த தேசிய இனமும் வாழாது!

இந்நிலையில், பார்ப்பனியத்தின் நாசக்காரத் திட்டத்தைத் தடுத்து நிறுத்தவும், ஆரிய பார்ப்பனிய இந்தியத் தேசியத்துக்கு எதிராகத் தமிழ்த் தேசியக் கருத்துகளை மக்களிடம் கொண்டு செல்லவும், தமிழ்த் தேசிய இனத்திற்கான அரசியலை முன்னெடுக்கவும், பார்ப்பனியம் பற்றிய புரிதலை உருவாக்கக்கூடிய கருத்தரங்குகளையும், மாநாட்டையும் நடத்துவது உடனடித் தேவையாகும்.

# பாசிச பார்ப்பனிய எதிர்ப்பு மாநாட்டின் தேவையை வலியுறுத்தி இயக்கங்களின் அறிக்கைகள்!

### தோழர் சுப. உதயகுமரன்
### பச்சைத் தமிழகம் கட்சி

'பாசிசம்' என்பது அடக்கியாள விரும்புகிற ஓர் அரசியல் சித்தாந்தத்தைக் குறிக்கும் சொல். சர்வாதிகாரம், சாதியவாதம், இனவாதம், மதவாதம், இந்துத்துவம், ஆரியத்துவம், பார்ப்பனத்துவம், வலதுசாரி, பிற்போக்குவாதி என்றெல்லாம் நமது அன்றாட அரசியல் வாழ்வில் நாம் பயன்படுத்துகிற பற்பல சொற்களின் உட்கருத்துகளையும் உள்ளடக்கிய ஒரே சொல்தான் பாசிசம்.

பாசிசத்தை தனிமனிதர்களின் அதிகாரவெறி என்றோ, வெறும் வெறுப்பரசியல் மட்டும்தான் என்றோ சுருக்கிப் பார்ப்பது பெரும் தவறு. முதலாளித்துவ நாடுகளில் முதலாளித்துவம் நெருக்கடியான காலக்கட்டத்தை எதிர்கொள்ளும்போது, பிற்போக்கு ஆதிக்கசக்திகளின் ஈடுபாடுகளைப் பாதுகாக்கும் அரசியல் போக்குத்தான் பாசிசம் என்று கம்யூனிசம் விவரிக்கிறது. இன்றைய உலகில் தாராளமயம், தனியார்மயம், உலகமயம் எனும் முதலாளித்துவ மும்மை 'வளர்ச்சி' என்கிற பெயரில் அதீத மாசுபாடு, புவி வெப்பமயமாதல், பருவநிலைச் சிதைப்பு என்று பூவுலகின் அடிப்படைகளையேத் தகர்த்துக் கொண்டிருக்கும்போது, பாசிசம் பல நாடுகளில் பல்வேறு வழிகளில், பற்பல தன்மைகளுடன் தன் கோரப்பற்களைத் துருத்தி நிற்கிறது.

அதிகாரத் தளங்களில் மட்டுமல்லாமல், உலகளாவிய குடிமைச் சமூகங்களிலும் புதிய பாசிச சித்தாந்தமும் (நியோ - பாசிசம்), அமைப்புகளும் பல்கிப் பெருகியிருக்கின்றன. இன்றைய இணையத்தில்கூட பாலியல் தளங்களுக்கு இணையாகப் பாசிசத் தளங்கள் நிறைந்திருப்பதாகப் புள்ளிவிபரங்கள் சொல்கின்றன. பல நாடுகளில் வலதுசாரி பாசிசக் குழுக்கள் தடைசெய்யப்பட்டிருந்தாலும், அவை இன்னல்கள் ஏதுமின்றி இயங்கிக்கொண்டுதான் இருக்கின்றன.

உலகெங்கும் பல ஆட்சியாளர்கள் அதிகாரத்தைத் தட்டிப்பறிக்கவும், தக்கவைத்துக் கொள்ளவும் பாசிசச் சிந்தனையையும், செயல்பாடுகளையும் பிரயோகிக்கின்றனர். 'ஏழ்மையை அகற்றுவோம்,' 'வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்போம்' என்றெல்லாம் சொல்லி மக்கள் ஆதரவைப் பெறுவதைவிட, 'புதிய தேசம்,' 'நமது பேரரசு,' தேசியப் புண்ணாக்கு என்றெல்லாம் வெற்று முழக்கங்களை, வெறுப்புப் பேச்சைப் பயன்படுத்தி, மக்களை உசுப்பேற்றி எளிதில் அடிமைகளாக்குகின்றனர்.

தம்மினத்தின் வரலாற்றுப் பின்னடைவுகள் மீதான கோபம், தற்காலச் சமூகத்தின் ஒரு சாரார் மீதான வெறுப்பு, வருங்காலத்தைத் தமதாக்கிக்கொள்ள வேண்டுமெனும் பேராசை போன்ற எதிர்மறை உணர்வுகளைச் சாமர்த்தியமாகப் பயன்படுத்துகிறார்கள் பாசிஸ்டுகள். முன்னாள் பிரெஞ்சு அதிபர் சார்ல்ஸ் டி கால் சொன்னதுபோல, உங்கள் மக்கள் மீதான அன்பு முதன்மை பெறும்போது, அதன் பெயர் நாட்டுப்பற்று; பிற மக்கள் மீதான வெறுப்பு முதன்மை பெறும்போது, அதுதான் தேசியவாதம். பாசிஸ்டுகள் எப்போதுமே கொடும் தேசியவாதிகள் என்பதால் வெறுப்பையே உமிழ்கிறார்கள்.

இந்த ஆபத்தான பாசிச அரசியலை இந்திய மண்ணில் நடாத்திக் கொண்டிருக்கும், தமிழ்நாட்டில் நடாத்த முயலும் பார்ப்பனியத்தை தோலுரித்துக்காட்ட, தொலைத்துக்கட்ட, தமிழக மக்கள் முன்னணி எதிர்வரும் சனவரி 6, 2024 அன்று சென்னையில் நடத்தவிருக்கும் "பாசிச பார்ப்பனிய எதிர்ப்பு மாநாட்டை" பச்சைத்தமிழகம் கட்சி நன்றியுடன் வரவேற்கிறது, ஆதரிக்கிறது.

***

### தோழர் கண. குறிஞ்சி
### தமிழ்நாடு மக்கள் உரிமைப் பேரவை

இந்திய மக்களின் இரு பெரும் பகை சக்திகள், பார்ப்பனியமும், முதலாளியமும் என வரையறுத்தார் அண்ணல் அம்பேத்கர். இன்றைய சூழலிலும் இது பொருத்தப்பாடு மிக்கதாக விளங்குகிறது. பொருளாதார மாற்றத்தைப் பொதுவுடைமை இயக்கங்களும், பண்பாட்டு மாற்றத்தைத் திராவிட இயக்கங்களும் முக்கியத்துவம் கொடுத்துத் தனித்தனியே செயல்பட்டன. பொருளாதாரம், பண்பாடு எனும் இரு தளங்களிலும் மாற்றத்திற்கான முயற்சியை, இன்றைய உலகமயச் சூழலில் தனித்தனியாகவோ அல்லது ஒன்றன் பின் ஒன்றாகவோ மேற்கொள்ள முடியாது; கூடாது.

பொருளாதார மாற்றத்தையும் பண்பாட்டுப் புரட்சியையும் ஒருங்கிணைத்து முன்னெடுக்க வேண்டிய அவசரத் தேவை இன்று எழுந்துள்ளது. அதன் வெளிப்பாடுதான் பார்ப்பனியம் மற்றும் பாசிசத்திற்கு எதிரான முழக்கம்.

பாசிசம் மற்றும் பார்ப்பனியம் ஆகியவற்றை எதிர்ப்பதோடு, தேசிய இனங்களின் முற்றுரிமைக்காகவும் போராட வேண்டிய அவசரத் தேவையும் எழுந்துள்ளது. அதுவும் எல்லாவற்றையும் மையப்படுத்தி ஒற்றைமயமாக்கும் போக்கு மேலெழுந்துள்ள இன்றைய சூழலில், மாநிலங்களின் இறையாண்மையை முன்னுரிமைப் பட்டியலில் இணைக்க வேண்டியது தவிர்க்க முடியாததாகி விட்டது.

எனவேதான் பாசிச எதிர்ப்பு / பார்ப்பனிய ஒழிப்பு / தேசிய இனங்களின் இறையாண்மை எனும் முப்பெரும் இலக்குகளை நமது செயல்நெறியாக வரித்துக் கொள்ள வேண்டிய தேவை எழுந்துள்ளது. அவற்றை வலியுறுத்தச் சென்னை மாநாடு நம்மை அறை கூவி அழைக்கிறது. ஒன்றிணைவோம்! அதிர்வுகளை உருவாக்குவோம்!

***

### தோழர் வாலாசா வல்லவன்
### மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி

இந்தியாவைப் பொறுத்தவரை பார்ப்பனியமே பாசிசம். ஆர் எஸ் எஸ் பா.ச. க. கும்பல்கள் நம்மை 2000 ஆண்டுகளுக்குப் பின்னோக்கி அழைத்து செல்ல திட்டமிட்டுப் பணியாற்றுகிறார்கள். அவர்களுடை மொழியையும் பண்பாட்டையும் மற்ற இன மக்கள் மீது திணித்து வருகின்றனர். மநு நீதியை மீண்டும் சட்ட ஏற்பிசைவு அளிக்கும் வகையில் சன்னியாசிகள் நிழல் அரசியல் நிர்ணய அவையை உருவாக்கி புதிய அரசமைப்பை இயற்றிக் கொண்டிருக்கிறார்கள். மீண்டும் நால்வருணத்தை நிலைநாட்ட முயற்சி செய்து வருகிறார்கள். இந்தியா என்றால் இந்தியும் சமற்கிருதமும் மட்டும் என வெளி உலகுக்குக் காட்டுவதற்காக அரசுப் பணத்தைக் கோடிக் கணக்கில் செலவழிக்கிறார்கள். இந்தப் காவி பாசிச பார்ப்பனிய சதிகாரக் கூட்டத்தின் செயல்திட்டங்களை முறியடிக்கவே இந்தப் பார்ப்பனிய பாசிச எதிர்ப்பு மாநாடாகும். அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டியது காலத்தின் கட்டாயம் ஆகும்.

***

### தோழர் நிலவழகன்
### மக்கள் தமிழகம் கட்சி

தமிழக மக்கள் முன்னணி எதிர்வரும் 2024 சனவரி 6ஆம் நாள் தலைநகர் சென்னையில் பாசிச பார்ப்பனிய எதிர்ப்பு மாநாட்டை நடத்துகிறது.

தமிழ்நாடு பன்னெடுங்காலமாகப் பொதுமை மற்றும் சமத்துவச் சிந்தனையால் வழிநடத்தப்பட்ட தேசமாகவே இருந்து வந்திருக்கிறது. அதற்கு வள்ளுவரும் வள்ளலாரும் சிறந்த சான்றாளர்கள்.

தேசங்களையும், இனங்களையும், மொழிகளையும் கடந்து உலகைப்பொதுமறை என்று வள்ளுவம் போற்றப்படுவதற்குக் காரணம் அது உலக மக்கள் அனைவருக்குமான வாழ்வியல் நெறிமுறைகளைப் பற்றி பேசியதால்தான்.

உயிர்கள் என்பதைத்தவிர வேறெந்த வேறுபாடுகளும் மனிதர்களுக்குள் இல்லை, ஒரு மனிதன் சக மனிதரை நேசிப்பதும், அவர் துன்பம் கண்டு இரங்குவதையும் தவிர தெய்வீக நிலையென்று ஒன்றில்லை என்ற நன்னெறியர் வள்ளலாரின் தமிழ்நிலத்தில் பார்த்தீனியம் எனும் நச்சு செடிகளைப்போல பார்ப்பனியம் எனும் நச்சுப் பாம்பு தன் கோரப் பற்களோடு தமிழ்நாட்டு மக்களுடன் ஊடாடித் திரிகிறது. அது, புரட்சியாளர் அம்பேத்கார் அவர்கள் குறிப்பிட்டதை போல நாவில் கடவுளர் பெயர்களையும் கரங்களில் கொலைக்கருவிகளையும் வைத்துக்கொண்டு திரிகிறது.

தமிழ்நாட்டின் செம்மார்ந்த அறிவு செல்வங்களை, வரலாற்று ஆய்வுகளையும் ஆவணங்களையும் மறைக்கிறது அல்லது சிதைக்கிறது.

தமிழ் முன்னோர்கள் போற்றிய மானுடத்தின் உயர்ந்த அறக்கோட்பாடுகளை மறைத்து சக மனிதர்களிடையே பாசிச வெறுப்பரசியலை விதைத்து வருகிறது. அது தனது வெறுப்பரசியலுக்கு நமது கல்வி நிலையங்களையும், ஊடக துறையையும் பயன்படுத்திக்கொள்ள முனைகிறது.

தமிழ்நாட்டின் கல்வி, வேலை வாய்ப்பு, சட்டத்துறை, நீதித்துறை, மருத்துவம் போன்ற அனைத்துத் துறைகளிலும் தனது மேலாதிக்கத்தை நிறுவ எத்தனிப்பதோடு மட்டுமல்லாமல் தமக்குச் சாதகமான பா.ச.க. ஆட்சியின் அதிகாரங்களை, ஆளுநர்களைப் பயன்படுத்திக் கொண்டு தமிழ் மக்களின் பாதுகாப்பு அரண்கள் மீது தாக்குதல் நடத்தவும் துணிந்திருக்கின்றனர்.

தமிழ்நாட்டின் உரிமைகளைப் பறிப்பது, கனிம வளங்களைச் சூறையாடுவது, மக்கள் விரோத திட்டங்களைக் கொண்டு வந்து வேளாண் நிலங்களைப் பாழாக்குவது எனப் பார்ப்பனியத்தின் பாசிச வெறிதிட்டங்களின் பட்டியல் நீள்கிறது.

அந்த அவர்களின் சதிகளைப் புரிந்து கொள்ளவும் அதை முறியடிக்கவுமான செயற்பாட்டுக் களத்தை உருவாக்குவதற்கான சனநாயக திசைவழியை தீர்மானிப்பதற்கான பாசறைப்பள்ளி எழுச்சியே இம்மாநாடு.

நமது தமிழ்நிலத்தைச் சூழும் காவி இருளகற்ற.. செங்கதிர்களாய்த் தமிழ்நாட்டு இளையோர், மாணவர்கள், சான்றோர், பெண்கள், தொழிலாளர்கள் அனைவரும் கூடும் இம்மாநாட்டில் பங்கேற்பதன் மூலம் தங்கள் வரலாற்றுக் கடமையை ஆற்ற அனைவரையும் மக்கள் தமிழகம் கட்சி உரிமையோடு அழைக்கிறது. மாநாடு வெல்லட்டும்! தமிழ்நாடு வெல்லட்டும்!

***

### தோழர் பாவெல்

## இனங்களின் இறையாண்மைக்கான இளைஞர் மாணவர் இயக்கம்

வரலாற்று வளர்ச்சிக்கான முழக்கங்களைக் கொண்ட மாநாட்டுக்கு ஆதரவை வழங்குவது தமிழ்நாட்டு மக்களின் அனைவரின் கடமையாகும்.

மதவெறி பாஜக (BJP) மோடி காவிக்கும்பல், டெல்லி ஒன்றிய [நடுவண்] ஆட்சியைக் கைப்பற்றி, மதவெறி பாசிச ஆட்சியை நிறுவியுள்ளது. இது இனங்களின், தேசங்களின், மக்களின் அரசியல் பொருளாதாரம், மொழி, பண்பாட்டு உரிமைகளைப் பறித்து நசுக்குகிறது.

மக்களின் குடியுரிமை, சனநாயக உரிமை, மத உரிமை இனங்களின் இறையாண்மை போன்ற சமூக வளர்ச்சிக்கான போராட்டங்களை தீவிரவாதம், பயங்கரவாதம் என முத்திரை குத்தி, சனநாயக போராளிகளின் மீதும், மக்களின் மீதும், சிறுபான்மை மதங்களின் மீதும், அரசு பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டு, மண்டை ஓட்டு மாலையுடன் தொடர்ந்து கொண்டாட்டம் போடுகிறது. இன்று மணிப்பூர் மக்களின் மண்டை ஓடுகளில் மத போதை மது அருந்தி மகிழ்கின்றது.

இந்த மதவெறி பாசிச கும்பல், உலக மேலாதிக்க பாசிச ஏகாதிபத்திய கும்பலுடனும், உள்நாட்டுப் பாசிச ஏகபோக அதானி, அம்பானி போன்றவர்களுடனும், கிராமப்புற சாதி ஆதிக்க எதேச்சதிகார கும்பலுடனும் கைகோர்த்துக்கொண்டு, ஒரு கூட்டுப் பாசிச சர்வாதிகார ஆட்சியை நடத்துகிறது.

இவர்கள் பின் தங்கிய மதவாத சக்திகளை அடித்தளமாகக் கொண்டு செயல்படுகின்றனர். இந்த சக்திகளைக் குறித்து மார்க்சிய கண்ணோட்டத்தில் கூறினால், தன்னைத்தானே இன்னும் கண்டறிந்து கொள்ளாமல், தன்னையே இழந்துவிட்ட, மனிதனின் உணர்ச்சியும், சுய உணர்வும்தான் மதம் என்பது. இது சமூக முன்னேற்றத்திற்கு என்றுமே பயன்படாத உணர்வாகும். இவர்களை மதவெறியூட்டி பிற்போக்கு சக்திகள் எளிதாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

இன்று மதவெறி பாசிசத்தை எதிர்க்கின்ற கட்சிகளிடம் இப்பாசிசத்தின், பொருளியல் அடித்தளத்தையும், அதன் விளைவான சாதிய உறவுகளை அகற்றுவதற்கான, அடிப்படை மாற்றத்துடன் கூடிய இன விடுதலையைச் சாதிப்பதற்கான எந்த திட்டமும் இல்லை. இக்கட்சிகள் நிலவும் மதவெறி பாசிசத்திற்கு மாற்று, அடிப்படை மாற்றத்துடன் கூடிய இனவிடுதலைதான் என்று ஏற்றுக் கொள்வதும் இல்லை.

மாறாக, இக்கட்சிகள் இன்று சமூக நீதி என்ற பெயரில் வேலைவாய்ப்பில் சாதிய இட ஒதுக்கீட்டை மட்டுமே பிரதான ஆயுதமாக கையில் எடுத்துள்ளனர். இது பாசிசத்தின் பொருளியல் அடித்தளத்தையும், சாதியின் அடித்தளத்தையும், மதவாதத்தின் அடித்தளத்தையும் ஒருபோதும் தகர்க்காது. அடிப்படை மாற்றங்களுக்கு மாற்றான இந்த சீர்திருத்தங்கள், பாசிசத்தின் அடித்தளத்தைப் பதப்படுத்தி வைத்திருக்கவே பயன்படும்.

சாதிமுறையைத் தனது அடித்தளமாகக் கொண்ட இந்து மதம், இங்குள்ள இனங்களின் மதம் அல்ல. இனங்களில் இருந்து தோன்றிய மதமும் அல்ல. இனங்களிடையே நீண்ட காலமாய் நிலவிவந்த கிராமச் சமுதாயத்திலும், மலைவாழ் மக்களிடையிலும், வழிபாட்டைத்தவிர, மதம் தோன்ற வாய்ப்பே இல்லை.

மாறாக வந்தேறி ஆரியப் பார்ப்பனர்கள், தங்களின் தலைமையை மதவாத அடிப் படையில் நிறுவ உருவாக்கிக் கொண்டதுதான், வேதங்களைக் கொண்ட இந்து மதம்.

மார்க்ஸ் இதுகுறித்து, கிருத்துவ பாதிரிகளின் அறைகூவலை எதிர்த்து விமர்சிக்கும்போது, "மதவாதிகளாகிய நீங்கள் முன் கூட்டியே ஆய்வின்றி, ஆதாரமின்றி; விஞ்ஞான உண்மைகளும், மத உண்மைகளும் ஒன்றே எனக் கூறுவதும், எனவே மக்கள், கடவுள் பற்றியும், மதம் பற்றியும், வேதங்கள் பற்றியும் தெளிவான கண்ணோட்டம் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என அறைகூவல் விடுகின்ற தீர்க்கதரிசிகள் ஆகிவிட்டீர்கள்" எனக் கூறியதுடன், இந்திய பிராமணர்களின் கீழ்க்காணும் நிலைப்பாட்டை அவர்கள் முன்பு கேள்வியாய் வைக்கின்றார்.

“ஆனால் வேதங்களைப் படிக்கும் உரிமையைத் தனக்கு மட்டுமே வைத்துக் கொண்டே, வேதங்களின் புனிதத் தன்மையை நிரூபிக்கும் இந்திய நாட்டு பிராமணனைப் பொறுத்தவரையிலும் உங்கள் நிர்ணயிப்பு என்ன பயனை விளைவிக்க இயலும்” - மார்க்ஸ் [ மதத்தைப் பற்றி, பக் 26]

உழைக்கும் மக்கள் இந்து மத வேதங்களைப் படிப்பதும், படிப்பதை காதால் கேட்பதும் கொடும் தண்டனைக்குரிய [நாக்கை அறுக்கணும், காதில் ஈயத்தை காய்ச்சி ஊற்றணும்] குற்றம் என்றால், அது எவ்வாறு இங்குள்ள மக்களின், இனங்களின் மதமாக இருக்க முடியும்.

எனவேதான் வழிபாடெல்லாம் மதமல்ல வந்தேறிகளின் இந்துமதம் நமதல்ல - என்ற முழக்கத்தை, இனங்களின் இறையாண்மைக்கான இளைஞர் மாணவர் இயக்கம், நீண்ட காலமாக முழங்கிவருகின்றது.

மக்கள் தங்களின் தேவைகளைத் தாங்களே தேடிக்கொள்ள வேண்டும்; தீர்த்துக்கொள்ள வேண்டும் என்ற நிலை உள்ள வரையும், யாராலும், எதனாலும் எந்தத் தலையீடும் இல்லாத குடும்பங்கள் அமையாத வரையும், மக்கள் தங்களின் இன்னலுக்குத் தீர்வுகான, இறைவனை நாடுவது இயல்பேயாகும்.

எனினும் இதற்கு நீண்ட நெடுங்கால கிராமச் சமுதாயத்தினுடையதுமே, இன்னும் தொடரும், இயற்கை வழிபாடு, நடுகல் வழிபாடு, மாண்டோர் கோயில் வழிபாடு போன்றவை பற்றி ஏற்கெனவே உள்ளது. ஆனால் இன்று வந்தேறி இந்துமதத்தின் கொடூரங்கள், இவற்றுடன் கூடிக் குலாவி, அவற்றைக் கொலைக் களத்திற்கு அனுப்பிவிட்டு, தனது சாதிமுறை கொண்ட மத ஆதிக்கத்தை நிறுவ முயற்சிக்கின்றது. இதை மக்கள் உணரும்படி செய்வது அவசியமாகும்.

ஆனால், இந்து மதவெறி பாசிசத்தை எதிர்ப்பவர்கள், தாங்கள் இந்து மதத்தின் எதிரிகள் அல்லர், மாறாக தாங்கள்தான் இந்து மதத்தின் உண்மையான பாதுகாவலர்கள் என்று கூறி, அறநிலையத்துறையின் சாதனைகளைப் பட்டியலிடுவது தீர்வாகாது. இது இடைக்காலமாக ஒரு மிருதுவான காவி பாசிசத்தை மினுக்கச் செய்ய வேண்டுமானால் பயன்படலாம். எனவே, மாநாட்டின் முழக்கமான பார்ப்பனிய இந்து மதவெறி, சாதிவெறி பாசிசத்தை முறியடிப்போம் என்பதே சரியான முழக்கமாகும்.

எனவே, சிறுவீத உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட சாதி சமுதாயத்தை, அப்படியே பாதுகாத்து, தங்களின் சுரண்டலுக்காக, அதில் வாடகை இயந்திரங்களையும், விதை, உரம், உயிர்க்கொல்லிகள் போன்ற இரசாயனங்களைப் புகுத்திக் கொள்ளையடிக்கும் ஏகபோகங்களான அம்பானி, அதானி உள்ளிட்ட அந்நிய நாட்டு கம்பெனிகளையும், அவர்களின் மூலதனங்களையும் பறிமுதல் செய்வோம் என்ற முழக்கம் இனங்களின் அடுத்தக் கட்டப் பாய்ச்சாலுக்கானதே.

மேலும், மேற்கண்ட கூட்டங்களின் சுரண்டல் ஆதிக்க நலனுக்காக இனங்களின் எதிர்ப்பை ஒடுக்க, இனங்களை நசுக்க ஆங்கிலேயனால் உருவாக்கப்பட்ட ஆளுநர் முறையை ஒழிக்கப் போராடுவோம் என்ற முழக்கமும், இனங்களின் உரிமைக்கான சரியான முழக்கமேயாகும்.

இடைக்காலமாக மக்களவை கலைக்கப்பட்டுச் சம உரிமை கொண்ட மாநிலங்களவையிலிருந்தே ஒன்றிய(நடுவண்) அமைச்சரவை தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற முழக்கம் இனங்களின் போராட்டம் இறுதி இலட்சியத்தை அடைய படிக்கல்லாகப் பயன்படும் சரியான செயல்தந்திர முழக்கமேயாகும்.

அனைத்துக்கும் அச்சாரமாக விளங்கும் தேசிய இனங்கள் விரும்பினால் தாங்களே ஒரு வாக்கெடுப்பை நடத்தி, பிரிந்து செல்லும் உரிமையை, படை கொண்டு தடுக்கும் பாசிச ஒன்றிய (நடுவண்) அரசை எதிர்த்து, அடிப்படை மாற்றத்துடன் கூடிய இன விடுதலைக்குப் போராடுவது என்ற மாநாட்டின் முழக்கம் வரலாற்று வளர்ச்சிக்கு உகந்தது என்பதால் அனைத்து இன உணர்வாளர்களும், சனநாயக சக்திகளும், உழைக்கும் மக்களும் மாநாட்டிற்கு ஆதரவளித்து, மாநாட்டு முழக்கத்தின் கீழ் ஒன்று திரள்வது வரலாற்றுக் கடமையாகும்.

***

### தோழர் தங்க. குமரவேல்

## தமிழ்நாடு மக்கள் விடுதலை இயக்கம்

தமிழக மக்கள் முன்னணி நடத்தும் பாசிச பார்ப்பனிய எதிர்ப்பு மாநாட்டில் பங்கேற்று உழைக்கும் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க அறைகூவி அழைக்கிறது தமிழ்நாடு மக்கள் விடுதலை இயக்கம்!

கார்ப்பரேட், காவிக் கூட்டணி நம்மை நாசமாக்கி காடு, மலை, நதி, கடல் என அனைத்து இயற்கை வளங்களையும் சுரண்டிக் கொழுக்கிறது! அதனை முறியடித்து புதிய சனநாயகம் படைத்திடுவோம்! அணிதிரள்வோம் மாநாட்டுக்கு!

மதவெறி அரசியல் செய்து மனித மாண்புகளை மணிப்பூர் உள்ளிட்ட அனைத்து இந்தியத் தேசங்களின் மண்ணிலும் புதைத்து வரும் ஆரியக் கோட்பாடுடைய ஆர்.எசு.எசு உள்ளிட்ட சங் பரிவாரங்களுடன் சங்கத் தமிழராய்ச் சாதி மதமற்ற தன்மானத் தமிழராய் நின்று சமர் புரிவோம்! அணிதிரள்வோம் மாநாட்டுக்கு!

பார்ப்பனியம் என்னும் பார்த்தீனியம் நமது பண்பாடு என்னும் பயிரில் களையாய் வளர்ந்து நம் வாழ்வைச் சிதைக்கிறது! அதனைக் களையெடுத்து சமத்துவப் பண்பாட்டுப் பயிர் வளர்ப்போம்! அணிதிரள்வோம் மாநாட்டுக்கு!

ஆண்ட பரம்பரை என இடைநிலைச் சாதிகளின் கொம்பு சீவி, மறுபுறம் சிவகுலத்தார் எனப் பட்டியல் சாதியினருக்குப் பூணூல் மாட்டி போலிப் பெருமையில் வீழ்த்தி சூத்திரராய்ப் பஞ்சமராய் நமைப்பிரித்துச் சூதாட்டம் ஆடிவரும் ஆரிய மாயைதனை அம்பலப்படுத்துவோம்! அணிதிரள்வோம் மாநாட்டுக்கு!

மனுநீதி என்னும் அநீதியை உடைத்து சமூகநீதி எனும் சமநீதி படைப்போம்! அணிதிரள்வோம் மாநாட்டுக்கு!

அதானி அம்பானியின் தனியுடைமை ஆகிப்போன இந்தியாவை மீட்டுப் பொதுவுடைமை இந்தியாவை உருவாக்குவோம்! அணிதிரள்வோம் மாநாட்டுக்கு! பாசிச ஒற்றை இந்தியாவைக் கருவறுத்துத் தேசங்களின் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சோசலிச ஒன்றிய இந்தியாவைக் கருக்கொள்ள வைப்போம்! அணிதிரள்வோம் மாநாட்டுக்கு!

***

## தோழர் செள. சுந்தரமூர்த்தி
## தமிழர் விடுதலைக் கழகம்

நம் தமிழ் மண் அய்யன் திருவள்ளுவர், வள்ளலார், வைகுண்டர், தந்தை பெரியார், பாவலரேறு பெருஞ்சித்திரனார், தோழர் தமிழரசன், புலவர் கலியபெருமாள் போன்ற எண்ணற்ற ஆளுமையர்களால் சாதி மதங்களைக் கடந்து மனித நேயம் மிக்க மண்ணாக, மனித சமத்துவத்திற்கான மண்ணாக ஏற்றம் பெற்று நிற்கிறது. கடந்த கால் நூற்றாண்டுக் காலமாக மதவாத சக்திகள் பல வழிகளில் இந்த மண்ணை வீழ்த்திப் பார்ப்பனிய அடிமைத்தனத்தின்கீழ் கொண்டு செல்ல தொடர்ச்சியான முன்னெடுப்புகளைச் செய்து கொண்டிருக்கின்றன. எளிமையாக மனிதர்களை ஆட்படுத்தக்கூடிய சாதி, மத உணர்வைத் தூண்டி அதன் வழியாக அவருடைய அறியாமையை வளர்த்து அவர்களைப் படுகுழிக்குத் தள்ளும் வேலையைத் தொடர்ச்சியாக இந்தப் பாசிச பார்ப்பனிய பாஜக மற்றும் இந்திய ஆளும் வர்க்கங்களும் அதன் ஒட்டு சதையாகத் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய சில அமைப்புகளும் தொடர்ச்சியாக நம்மிடையே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்தியாவிலிருந்து 50 ஆண்டுக் கால முன்னேற்றத்தைப் பெற்றிருக்கக்கூடிய தமிழ்நாட்டில் தமிழ்நாட்டின் வளங்களை எல்லாம் சுரண்டுவதற்காகவும், தமிழ்நாட்டின் விடுதலை உணர்வை மட்டுப்படுத்துவதற்காகவும் தொடர்ச்சியாக இது போன்ற பிளவுகளையும், பிரிவுகளையும் இந்தியப் பார்ப்பனியம் செய்து கொண்டிருக்கின்றது.

அண்மைக்காலமாகத் தொடர்ச்சியாகப் பல்வேறு மதச் சடங்குகளையும், தொடர்ச்சியாக நடக்கக்கூடிய மத விழாக்களை எல்லாம் பார்ப்பனியம் தன் வயப்படுத்த முயல்கிறது. அது மட்டுமின்றித் தமிழ்ச் சான்றோர்களையும், தமிழ்ச் சான்றோர்களின் படைப்புகளையும் தனதாக்கிக் கொள்ள சமசுக்கிருதப் பார்ப்பனியம் இங்கே முயற்சி செய்து கொண்டிருக்கிறது. சாதி மத வேறுபாடற்றுத் தமிழர்கள் ஒன்றாக வாழ்ந்து தமிழர்கள் ஒன்றாகப் பெரும் சாதனைகளை எட்டிக் கொண்டு இருக்கக் கூடிய இந்த வேலையில் தமிழர்களுக்குள் குடிப்பெருமை, தமிழ்ச்சாதி, தமிழ்க் குடி என்ற பல்வேறு குழப்பங்களை ஏற்படுத்தி அதைத்தான் தமிழ்த் தேசியம் என்றும், இந்தியப் பார்ப்பனியத்திற்கு தமிழர்களை இட்டுச் செல்லக் கூடிய வேலையை ஒரு கும்பல் தொடர்ச்சியாக செய்து வருகிறது.

இதன் வழியாக இந்திய ஒன்றியம் முழுக்க முழுக்கத் தமிழ்நாட்டின் உரிமைகளை மறுப்பதோடு, அனைத்து உரிமைகளையும் தன்பால் பிடுங்கிக் கொண்டு தமிழ்நாடு அரசையும், தமிழ்நாட்டு மக்களையும் இந்தியப் பார்ப்பனியத்தின் கீழ் கையேந்தும் நிலைக்குக் கொண்டு செல்கிறது. இந்த நிலையில் இருந்து மாற்றம் பெற்று தேசிய இன உணர்வு பெற்று தமிழர்களின் தொன்மை, வரலாற்றை உணர்ந்து தமிழர்களின் தன்னாட்சியை இந்த மண்ணில் நிலைநிறுத்தவும் அதற்கு எதிராக இருக்கக்கூடிய இந்தப் பாசிச வெறிபிடித்த பார்ப்பனிய பாஜக மற்றும் அதன் தொங்கு சதைகளாக இங்குச் செயல்படக்கூடிய பல்வேறு அமைப்புகளையும் அடையாளம் காட்டவும் இந்தப் பணி அவசியமாய் இருக்கிறது. அதன் வழியே இந்த மண்ணில் இனியும் இந்தப் பார்ப்பனிய பாசிசத்திற்கு இடம் கொடுத்தால் ஒவ்வொரு குடும்பத்தில் இருக்கக் கூடிய உறவுகளுக்குள்ளேயே பிரிவுகளையும், பிளவுகளையும் ஏற்படுத்தக்கூடிய செயலைத் தொடர்ச்சியாகச் செய்துவிடும். இது தடுத்து நிறுத்தப்பட வேண்டும். இந்த மண்ணில் பார்ப்பனியம் எந்த வழியில் எல்லாம் ஆளுமை செலுத்துகிறது. எப்படியெல்லாம் தமிழர்களுடைய வாழ்வியலை மடைமாற்றம் செய்கின்றது என்பதை உணர்த்துவதற்கும், பார்ப்பனிய பாஜகவையும், பார்ப்பனிய இந்துத்துவ இந்திய சக்திகளையும் வேரறுத்துச் சாதி மதமற்ற சமத்துவ தமிழ்நாட்டை உருவாக்கவும் தமிழ்த் தேசிய குடியரசை நிறுவ ஏற்ற வழிவகை செய்ய அனைவரையும் அன்போடு அழைக்கிறது தமிழர் விடுதலைக் கழகம். ஒன்றிணைவோம்; தமிழ்நாட்டில் மாற்றத்தை உருவாக்குவோம்.

***

## தோழர் சுப்பு. மகேசு
## தமிழர் உரிமை இயக்கம்

கடந்த 19 11 2023 அன்று தமிழ்நாடு முழுவதும் ஆர் எஸ் எஸ் பேரணி நடந்து முடிந்துள்ளது. பலமுறை இந்திய ஒன்றிய அரசால் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பு ஆர் எஸ் எஸ் இருந்தாலும் உச்ச நீதிமன்றத் தவறான வழிகாட்டலால் தமிழக முழுவதும் ஆர் எஸ் எஸ் பேரணி நடத்தப்பட்டுள்ளது. இந்திய ஒன்றியத்தில் நடைபெற இருக்கிற ஐந்து மாநிலச் சட்டமன்ற தேர்தலில் பரப்புரையில் ஈடுபட்டு வருகிற ஒன்றிய பா ஜ க அரசின் தலைமை அமைச்சர் நரேந்திர மோதி ராஜஸ்தான் பொதுக்கூட்டங்களில் பேசுகிறபோது அவர் இந்த ஒன்பது ஆண்டுக்கால ஆட்சியில் என்ன செய்தார் என்பதைச் சொல்லி வாக்குக் கேட்பதற்கு பதில் இந்தியா கூட்டணியின் சனாதன எதிர்ப்புத் திட்டம் நமது பண்பாட்டைச் சிதைப்பதாகும் என்று பேசுகிறார். சனாதானம் என்றாலே பிறப்பின் அடிப்படையில் ஏற்றத்தாழ்வை உறுதிப்படுத்துவது தானே நான்கு வருணக் கோட்பாட்டையும் அதன் நடைமுறையையும் செயல்படுத்துவதுதானே இதைத்தான் இந்த ஒன்பது ஆண்டுக்கால பாஜக ஆட்சியில் செம்மையாகச் செயல்படுத்தி வந்துள்ளனர். பழைய காட்டுமிராண்டிக் காலத்திற்கு மக்களைக் கொண்டு செல்வது மதக் கருத்துகளும் சாதிய ஒடுக்குமுறைகளும் மீண்டும் மீண்டும் எழுச்சியூட்டப்படுகிறது. பாஜக, ஆர் எஸ் எஸ் ஆட்சியில் மணிப்பூர் மக்களை இனரீதியாக, மதரீதியாக பிளவுபடுத்திக் கொன்று குவித்த இரட்டை எஞ்சின் ஆட்சியின் இலட்சணத்தை மக்கள் அறிவர். இந்த இரட்டை எஞ்சின் ஆட்சியை இந்திய ஒன்றியம் முழுவதும் உள்ள பல் தேசிய இன மக்கள் மீதும் திணிக்கத் துடிக்கிறது. ஆர்எஸ்எஸ் மற்றும் அதன் தேர்தல் கட்சியான பாஜக இப்படித் தமிழ்நாட்டில் நீதிக் கட்சி தொடங்கி திராவிட கட்சிகள் ஆட்சியில் கொண்டுவரப்பட்ட சமூகநீதி திட்டங்களைக் காவு வாங்கியுள்ள பாஜக அரசுத் தகுதி தேர்வுகளை நடத்தித் தடுத்து வறுவதோடு புதிய கல்விக் கொள்கை என்கிற பெயரிலே நால்வருணக் கல்வியைத் திணிக்கத் துடிக்கிறது. மேடைதோறும் ஊழலுக்கு எதிராகச் செயல்படுகிறோம் எனக் கூறும் மோதி கும்பல் சாகர்மாலா என்கின்ற சாலை போடும் திட்டத்தில் மட்டும் சுமார் 7.5 லட்சம் கோடி ஊழல் செய்துள்ளார்கள் என்றால் இந்திய ஒன்றியம் முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள திட்டங்களில் எந்த அளவுக்கு ஊழல் செய்திருப்பார்கள் என கற்பனை செய்து கூட பார்க்க முடியவில்லை அதானி அம்பானியிடம் இந்தியாவை ஒப்படைத்துள்ள மோதி அமித் ஜா கும்பல் தமிழகம் உள்ளிட்ட அனைத்து தேசிய இன மக்களின் வாழ்வுரிமையை பரித்துள்ளனர் விலைவாசி உயர்வும் வேலை வாய்ப்பு இன் மையும் இந்தியாவில் வாழும் இளைஞர்களுக்கும் மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் ஒரு நம்பிக்கையற்ற வாழ்க்கையை உருவாக்கியுள்ளது மக்கள் தாங்கள் உயிர் வாழ்வதற்கு இந்திய ஒன்றியம் முழுவதும் நாடோடிகளாக இடம்பெயர்ந்து வருவது கண்கூடானது. வட மாநில இளைஞர்கள் தமிழகத்திற்கு வேலைவாய்ப்பு தேடி வருவதும் தமிழக இளைஞர்கள் வேலை வாய்ப்பு தேடி உலகம் முழுவதும் நகர்வதும் ஆகவே இந்திய ஒன்றியத்தின் பல் தேசிய இனங்களின் பண்பாடு பொருளியல் மற்றும் அரசியலைச் சிதைத்து வேற்றுமையில் ஒற்றுமை என்கிற கோட்பாட்டை நசுக்கிச் சமத்துவம் சகோதரத்துவம் சனநாயகம் என்கின்ற கோட்பாட்டிற்கு எதிராக வெறுப்புப் பண்பாட்டைச் சிறுபான்மை மக்களுக்கு எதிராக விதைத்து இந்தியாவை ஒரு மதத்தின் அடிப்படையில் கட்டமைக்கத் துடிக்கும் பாஜக ஆர் எஸ் எஸ் □ன் பாசிச பார்ப்பனிய ஒடுக்கு முறையைத் தடுத்து நிறுத்துவோம். தமிழ்நாடு உள்ளிட்ட பல தேசிய இனங்களின் உரிமைகளைப் பாதுகாக்க 2024 சனவரி 6 ல் தமிழக மக்கள் முன்னணியின் சார்பில் சென்னையில் நடைபெற இருக்கிற பாசிச பார்ப்பனிய எதிர்ப்பு மாநாட்டிற்கு அழைக்கிறோம்..

***

## தோழர் தெய்வமணி
## அம்பேத்கர் சிறுத்தைகள் இயக்கம்

வருகின்ற ஆண்டு 2024 சனவரி 6 ஆம் நாள் வடசென்னையில் தமிழக மக்கள் முன்னணி சார்பில் நடைபெற இருக்கின்ற பாசிச பார்ப்பனிய எதிர்ப்பு மாநாட்டினை அம்பேத்கர் சிறுத்தையில் இயக்கம் வரவேற்கின்றது

புரட்சியாளர்.அம்பேத்கர், தந்தை பெரியார் போன்ற ஆளுமைகளின் காலத்திற்குப் பிறகு தொடர்ந்து பார்ப்பனிய சித்தாந்தங்களை எதிர்ப்பதற்கும், தொடர் பிரச்சாரம் மூலமாய் அதனைச் சமூக, அரசியல் களத்தில் போரிடப் போதுமான ஆற்றல்கள் இல்லாத சூழலில் பார்ப்பனியத்தின் 10 ஆண்டுகால ஆட்சியின் அதிகாரத்தை இந்துராஷ்டிரம் நோக்கிப் பயணிக்க செய்கின்ற இந்தக்காலக் கட்டத்தில் பார்ப்பனிய பாசிசத்தைத் தோலுரித்துக் காட்ட இப்படியான ஒரு மாநாடு தமிழ்ச் சமூகத்திற்கும், தமிழ்நாட்டிற்கும் தேவையான ஒன்றாக உள்ளது. பாசிச சித்தாந்தங்கள் மேலை நாடுகளில் கால் நூற்றாண்டுக்குள் அடித்து நொறுக்கப்பட்டு அது சனநாயகத்தில் ஊடாக மனித மாண்புகளை மீட்டுருவாக்கம் செய்து விட்டது. ஆனால் பார்ப்பனிய சமுகம் பாசிசத்தின் கூறுகளான கார்ப்பரேட்டிசம் (கூட்டுழைப்பு) +நாசிசம் (இனவாதம்) + தன்னிறைவுப் பொருளாதாரம் ஆகிய கூறுகளைக் கொண்டு பார்ப்பனிய சமுகம் இயங்குவது மாத்திரம் அல்லாமல் . 2000 ஆண்டுகளாய்ப் பாசிச ஒடுக்குமுறைகளைத் தமிழ்க்குமுகத்தின் மீது காலத்திற்கும் மாறாதாய் (சனாதனம்) எல்லா காலமும் நீடிக்கின்ற இந்தப் பார்ப்பனிய பாசிச ஒடுக்குமுறைகளைத் தமிழ்ச் சமூகத்திற்கு வெளி காட்ட இப்படியான மாநாடுகளும், கலந்துரையாடல்களும், போராட்டங்களும் தேவையாக உள்ளன. கற்பிப்போம் நம் அறம் சார்ந்த வாழ்க்கையை! ஒன்றுபடுவோம் தமிழினமாய்! போராடுவோம் சாதி,மதமற்ற தமிழ்த் தேசம் அமைக்க! இந்தப் போராட்டம் செல்வத்திற்காகவோ அதிகாரத்திற்காகவோ இல்லை. மனித விடுதலைக்கான போராட்டம், வெல்லட்டும் மாநாடு.

***

அறநெறி பரப்பும் குறள்நெறி விழா..

தி பி 2055 சுறவம் 13 ( 2024 சனவரி 27) காரிக்கிழமை

அழைக்கிறது:
திருக்குறள் பேரவையம்

திண்டுக்கல்லில் திருக்குறள் மாநாடு..

தொடர்புக்கு:
9840202911

# மொழித்தேச மாநிலங்களுக்குத் தனிக்கொடி தேவை..

● கண. குறிஞ்சி ●

இந்தியத் துணைக்கண்டத்தில் 1956 நவம்பர் 1 - ஆம் நாள், மொழிவழியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்டன. மொழிவாரி மாநிலங்களைப் பெற இந்திய அரசு ஒவ்வொரு முறையும் கடும் எதிர்ப்பைத் தெரிவித்து வந்துள்ளது. ஆயினும் மொழிவழி உரிமைக்கு ஆதரவாகக் கிளர்ந்தெழுந்த மக்களின் மாபெரும் எழுச்சியைக் கண்டு பின்வாங்கிய இந்திய அரசு, வேறு வழியில்லாமல் மொழிவழி மாநிலங்களை அமைக்க ஒப்புக் கொண்டது.

இந்தியாவில் 1936 ஏப்ரல் ஒன்றாம் நாள் முதன்முதலாக ஒரிசா (இப்பொழுது ஒடிசா) மாநிலம் உருவாக்கப் பட்டது. இந்நாளை "உட்கல டிபாசா" (Utkala Dibasa) எனும் பெயரில் ஒடிசா ஆண்டுதோறும் கொண்டாடி வருகிறது.அதன் பிறகு மாநிலங்களை மொழி வழியாகப் பிரிக்கக் காங்கிரசு அரசு பிடிவாதமாக ஒப்புக்கொள்ளவில்லை.

ஆனால், இதை ஏற்க மறுத்து, தெலுங்கு மொழி பேசும் ஆந்திராவைத் தனி மாநிலமாகப் பிரிக்க வேண்டும் எனப் பொட்டி சிறீ இராமலு என்பவர் 9.7.1952 முதல் சாகும் வரை உண்ணாநிலைப் போராட்டத்தை அறிவித்தார். ஆனால் இந்திய அரசு அதைக் கண்டு கொள்ளவில்லை. எனவே அவர் தனது உண்ணாநிலைப் போராட்டத்தில் உறுதியாக இருந்து, 15.9.52 அன்று உயிர் நீத்தார். இதைக் கண்டு தெலுங்கின மக்கள் பெருங் கோபத்துடன் கிளர்ந்தெழுந்தனர். மக்கள் போராட்டத்தால் ஆந்திரப் பகுதியே நிலை குலைந்தது. எனவே மக்களின் எழுச்சியைக் கண்டு நடுநடுங்கிய இந்திய அரசு, 1953 அக்டோபர் 1ஆம் நாள் ஆந்திராவைத் தனி மாநிலமாக்க இசைவளித்தது.

அதன் பிறகு, மொழி வழியாக மாநிலங்களைப் பிரித்தாக வேண்டிய நெருக்கடி இந்திய அரசுக்கு ஏற்பட்டது. எனவே வேறு வழியின்றிப் பல்வேறு மாநிலங்கள் மொழிவழியாகப் பிரிக்கப்பட்டன. மதராஸ், மைசூர், கேரளா, அசாம், பஞ்சாப், ஷம்மு - காஷ்மீர், உத்தரப் பிரதேசம், மத்தியப்பிரதேசம், இராஷஸ்தான், பீகார், மேற்கு வங்காளம், பம்பாய் ஆகியன 1956ஆம் ஆண்டு நவம்பர் 1ஆம் நாள் தனி மாநிலங்களாக உருவாயின.

இவை தவிர, இந்தியாவிலுள்ள பல்வேறு மாநிலங்கள் பல்வேறு ஆண்டுகளில் தனித்தனி மாநிலமாக உருவாயின. அரியானா (1966) சட்டீஸ்கர் (2000) ஜார்கண்டு (2000) தெலங்கானா (2014) போன்றவை வெவ்வேறு ஆண்டுகளில் தனி மாநிலமாயின. பல்வேறு பகுதிகளை இழந்து 1956 நவம்பர் ஒன்றாம் நாள் மெட்ராஸ் மாநிலம் உருவானது.

தமிழ்நாடு, கர்நாடகம், ஆந்திரா, கேரளா, பஞ்சாப், அரியானா, சட்டீஸ்கர், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான், புதுச்சேரி ஆகியன நவம்பர் ஒன்றாம் நாளை மிகச்சிறப்பாகக் கொண்டாடி வருகின்றன.

இருப்பினும், இந்தியாவிலுள்ள மாநிலங்களில் கர்நாடகாவின் கொண்டாட்டம் தனித்துவமானது. கர்நாடக மாநிலம் தனியே அமைவதற்கு முன்பே அதற்கென ஒரு கொடியை உருவாக்கும் முயற்சி தொடங்கிவிட்டது. அறுபதிற்கும் மேற்பட்ட ஆங்கிலக் கவிதைகளைக் கன்னடத்தில் மொழியாக்கம் செய்த கன்னட எழுத்தாளர் பி.எம். **சிறீ காந்தையா அவர்களின் கன்னடத பாவூடா** (கன்னடக் கொடி) என்ற 1938 ஆம் ஆண்டுக் கவிதையே கன்னடக்கொடி ஒன்று தேவை என்ற எண்ணம் உருவாகக் காரணம் எனக் கருதப்படுகிறது. (1938 ஆம் ஆண்டில்தான் "தமிழ்நாடு, தமிழருக்கே" என்ற முழக்கத்தைத் தந்தை பெரியார் அறிவித்தார் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.) பிறகு 1966ல் தொடங்கப்பட்ட கர்நாடக சம்யுக்த ரங்கா (கர்நாடக ஐக்கிய முன்னணி) எனும் அமைப்பின் செயலாளரான இராமமூர்த்தி என்பார் கன்னடம் பேசும் மக்களை ஒன்று திரட்டத் தனிக் கொடி தேவை எனக் கருதினார். பல்வேறு கன்னட அமைப்புகளைக் கலந்து பேசிய பின், வெளிர் மஞ்சள் நிறம் மேற்புறமும், சிவப்பு நிறம் கீழ்ப்புறமும் சமமாகப் பிரிக்கப்பட்ட ஒரு கொடியை அவர் உருவாக்கினார். மஞ்சள் வண்ணம் அமைதி மற்றும் தோழமையையும், சிவப்பு, வீரத்தையும் குறிப்பதாகக் கருதப்படுகிறது. பின்னர் 1966ஆம் ஆண்டு அவரால் தொடங் கப்பட்ட அரசியல் கட்சியின் கொடியாக அதை அவர் மாற்றிக் கொண்டார். அதன் பிறகு மிகக் குறுகிய காலத்திலேயே அவர் காலமாகிவிட்டார்.

ஆயினும், இராமமூர்த்தி பரிந்துரைத்த கொடியையே கன்னடர்கள் தங்களது கர்நாடக தேசத்தின் கொடியாக மாற்றிக் கொண்டனர். இக்கொடிக்கு அரசு அங்கீகாரம் இல்லாவிட்டாலும், இக்கொடியே மக்களின் கொடியாக மாறிவிட்டது. கர்நாடகத்தில் அனைத்துப் பகுதிகளிலும் இக்கொடியே பயன்படுத்தப் படுகிறது. இதை எதிர்ப்பார் யாரும் இல்லை. கர்நாடக ராஜ்ய உத்சவத்தின் பொழுது, ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 1ஆம் நாளன்று அம்மாநில முதலமைச்சரும், ஆளுநரும் இக்கொடியை ஏற்றிய பின் உரையாற்றுகின்றனர்.

கர்நாடகத்தில் நடைபெறும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தவறாமல் இக்கொடி பயன்படுத்தப் படுகிறது. கன்னட மொழி பேசும் மக்கள், வடநாடு சென்றால் இந்தி கற்றுக்கொள்கின்றனர். அது போலவே வட இந்தியர்கள் கர்நாடகத்திற்கு வரும் பொழுது உறுதியாகக் கன்னட மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டும் எனக் கன்னட மக்கள் வலியுறுத்துகின்றனர். இந்த உணர்வு கர்நாடகத்தில் இப்பொழுது பரவலாக மேலோங்கி வருவது குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் பல்வேறு போராட்டங்களில் இந்த இருவண்ணக் கொடி, கட்சி வேறுபாடின்றி பயன்படுத்தப்பட்டு வருகிறது.

கர்நாடகம் உருவான நவம்பர் ஒன்றாம் நாள் அரசு விடுமுறை எனப் பல ஆண்டுகளுக்கு முன்பே அரசாணை பிறப்பிக்கப்பட்டு, அது அரசு விழாவாகவும் கொண்டாடப்படுகிறது. கர்நாடகத்தின் வளர்ச்சிக்கும், கன்னட மொழியின் மேம்பாட்டிற்கும் பணியாற்றிய ஆளுமைகளுக்கு "ராஜோத்சவ் விருது" வழங்கப்படுகிறது. இவ்வாண்டு அரசு சார்பாக 90 பேருக்கு அப்படிப்பட்ட விருது வழங்கப்பட்டுள்ளது. "கர்நாடக ரத்ன" விருதுதான் அங்குள்ள மிகப் பெரிய விருதாகும். அதற்கு அடுத்தபடியாகக் கருதப் படுவது நவம்பர் ஒன்றாம் நாள் வழங்கப்படும் ராஜோத்சவ விருதாகும்.

நவம்பர் ஒன்றாம் நாள் கர்நாடகத்திலுள்ள பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் மற்றும் அரசு அலுவலகங்கள் எங்கும் விழாக் கோலம் பூண்டிருக்கும். சொற்பொழிவுகள், பேரணிகள், அலங்கார ஊர்திகள், நூல் வெளியீடு என எங்கும் கொண்டாட்டமே மேலோங்கி இருக்கும். இந்த நாளில் பெண்கள் மஞ்சள் சேலை மற்றும் சிவப்பு ரவிக்கை அணிவர். ஆண்கள் மஞ்சள் ஆடை மற்றும் சிவப்பு உருமாலை அணிந்து பெருமிதத்தோடு கர்நாடகத்தையும், கன்னடத்தையும் புகழ்ந்து பாரம்பரிய இசை மற்றும் நடன நிகழ்ச்சிகளை நடத்துவர்.

நவம்பர் ஒன்றாம் நாள் என்பது கன்னடர்களைப் பொறுத்தமட்டில், ஒரு மாநிலம் உருவான நாள் என்பதாக மட்டும் அதைக் கருதுவதில்லை. கர்நாடகத்தின் செழுமை மிக்க பாரம்பரியத்தையும், கன்னட மொழியின் மேன்மையையும் கொண்டாடும் ஒரு தருணமாகவே நவம்பர் ஒன்றாம் நாளைக் கன்னடர்கள் கருதுகின்றனர். இதன் அடையாளமாக மஞ்சள் சிவப்புக் கொடி கருதப்படுகிறது.



இந்தியத் துணைக் கண்டத்தில் கர்நாடகம் தவிர, ஜம்மு காஷ்மீருக்குத் தனிக் கொடி உள்ளது. 1931 சூலை 13ஆம் நாள் காஷ்மீர் மன்னரின் கொடுங்கோல் ஆட்சியை எதிர்த்துக் காஷ்மீர்ப் போராளிகள் போராடியபொழுது, 22 போராளிகள் இராணுவத்தால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டனர். அப்படிச் சுட்டுக் கொல்லப்பட்ட போராளி ஒருவரின் இரத்தம் தோய்ந்த சட்டையை எடுத்து, அதைக் கொடியாக ஏற்றினர் மக்கள். பிறகு 1939ஆம் ஆண்டு சூலை 11ஆம் நாள் அதில் சில மாற்றங்கள் செய்யப்பட்டு முறையான கொடி உருவானது. சிவப்பு வண்ணத்தில் ஜம்மு, காஷ்மீர் மற்றும் இலடாக் ஆகிய மூன்று பகுதிகளைக் குறிக்கும் மூன்று வெண்ணிறக் கோடுகளும், உழவைச் சிறப்பிக்க ஏர்க்கலப்பையும் கொண்டதாக அக்கொடி உருவானது. தேசிய மாநாட்டுச் கட்சித் தலைவர் ஷேக் அப்துல்லா அவர்கள் 1952 - ஆம் ஆண்டு இந்திய அரசுடன் செய்துகொண்ட புதுதில்லி ஒப்பந்தத்தின்படி, ஜம்மு - காஷ்மீர் கொடிக்கும், மாநிலத்திற்கான தனி அரசமைப்புச் சட்டத்திற்கும் ஒன்றிய அரசின் இசைவைப் பெற்றார்.

அரசமைப்புச் சட்டம் வழங்கிய 370ஆவது சிறப்புப் பிரிவின்படி தனிக்கொடியை ஜம்மு - காஷ்மீர் அரசு பல ஆண்டுகளாக அதிகார ஏற்புடன் பயன்படுத்தி வந்தது. ஆனால் தற்பொழுது அச்சிறப்புப் பிரிவு நீக்கம் செய்யப்பட்டுள்ளதால், தனிக்கொடிப் பயன்பாடு அரசியலில் சிக்கலுக்குள்ளாகி உள்ளது. ஆனால், கன்னட மக்கள் உள்ளத்திலிருந்து மஞ்சள் - சிவப்பு கொண்ட இரு வண்ணக் கொடியை எந்த அதிகாரத்தாலும் நீக்கிவிடமுடியாது

என்பதுதான் உண்மை நிலை. அதேபோல் நாகாலாந்து, தனக்கெனத் தனிக் கொடி தேவை என வலியுறுத்தி வருகிறது.

நாகாலாந்தின் தேசிய சோசலிசக் கவுன்சில் (National Socialist Council of Nagalim) நாகாலாந்திற்கெனத் தனி அரசமைப்புச் சட்டம், தனிக்கொடி, தனி நாடாளுமன்றம், தனி நீதிமன்றம் வேண்டும் என 2016 - ஆம் ஆண்டிலேயே பாரதீய சனதாக் கட்சியின் மோடி அரசசோடு பேச்சு நடத்தியது. ஆனால், அதன் முடிவுகள் வெளியில் வரவில்லை.

இந்தியாவுடன் இணைக்கப் படுவதற்கு முன், சிக்கிம் நாடு, தனக்கெனத் தனிக் கொடியை வைத்திருந்தது. புத்தரின் பிரார்த்தனைச் சக்கரம் மையத்தில் இருப்பதாக அந்நாட்டின் கொடி அமைந்திருந்தது. ஆனால், பின்னர் இந்தியத் துணைக்கண்டத்தின் ஒரு மாநிலமாக 1975 - ஆம் ஆண்டு அது இணைக்கப் பட்டுவிட்டது. அதன்பிறகு, அதிகார வழியில் அல்லாமல், மக்கள் அக்கொடியை இன்றும் அம்மாநிலத்தில் பயன்படுத்தி வருகின்றனர்.

தமிழ்நாட்டிற்கென தனிக்கொடி ஒன்று தேவை எனக்கருதி, கலைஞர் கருணாநிதி அவர்கள் 1970 - ஆம் ஆண்டு ஒரு கொடியைப் பரிந்துரைத்து அப்பொழுது தலைமை அமைச்சராக இருந்த இந்திராகாந்திக்கு அனுப்பி வைத்தார். ஆனால், அது நடைமுறைக்கு வரவில்லை.

தமிழ்நாட்டிற்கு ஒரு கொடி தேவை எனக் கூறினாலே, "தேசவிரோதி" "பிரிவினைவாதி" எனும் புளித்துப்போன குற்றச்சாட்டைத் தூக்கிக்கொண்டு வந்துவிடுகின்றனர், விவரம் தெரியாத சிலர். இந்தியாவிலுள்ள மாநிலங்கள், தனித்தனியே கொடிகள் வைத்துக் கொள்வதை அரசமைப்புச் சட்டம் தடை செய்யவில்லை என உச்சநீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. 1994 எஸ்.ஆர். பொம்மை (எதிர்) இந்திய ஒன்றியம் வழக்கில் இதைக் குறிப்பிட்டதோடு, கூட்டாட்சி என்பது இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கூறு எனவும், மாநிலங்கள் உயர்ந்தவை / அதிகாரம் மிக்கவை எனவும் அது சுட்டிக்காட்டியுள்ளது. மேலும் இந்திய தேசியக் கொடியின் மாண்பினைக் குலைக்கும் வகையில் மாநிலக் கொடிகளை ஏற்றக் கூடாது என்று அது வழிகாட்டியுள்ளது.

மேலும் கொடி குறித்த சட்டத்தொகுப்பில் (Flag Code of India) இந்திய தேசியக் கொடியையும், மாநிலத்தின் கொடியையும் ஒரே கம்பத்தில் ஏற்றக் கூடாது எனவும், மாநிலக் கொடிகளை இந்திய தேசியக் கொடியை விட உயரமாகப் பறக்கவிடக் கூடாது எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. இதுதான் கொடி பற்றிய அரசமைப்புச் சட்டத்தின் வழிகாட்டுதல்.

மேலும் இத்தகைய பிரச்சனை குறித்து உலக நாடுகளிலுள்ள நடைமுறை என்ன என்பதையும் ஒப்பிட்டுக் காணவேண்டும்.

அமெரிக்காவின் கொடியில் 50 நட்சத்திரங்கள் உள்ளன. இந்த ஐம்பது நட்சத்திரங்களும் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலுள்ள 50 மாநிலங்களைக் குறிக்கும். அது தவிர, அமெரிக்கக் கொடியில் 13 கிடைமட்டக் கோடுகளும் உள்ளன. பிரிட்டனிலிருந்து பிரிந்து, சுதந்திரமானவையாகத் தங்களைப் பிரகடனப் படுத்திக் கொண்ட 13 பிரித்தானியக் குடியேற்றப் பகுதிகளை அக்கிடைக் கோடுகள் குறியீடாக வெளிப்படுத்துகின்றன.



அமெரிக்காவில் ஒரு மாநிலத்தின் தனித்துவம், வரலாறு, இறையாண்மை மற்றும் அதன் அடையாளம் ஆகியவற்றை வெளிப்படுத்துவதாக அம்மாநிலத்தின் கொடி அமைந்துள்ளது. அது ஏதோ ஒரு துண்டுத் துணி என்பதாக அம்மாநில மக்கள் அதைக் கருதுவதில்லை. தங்களது மாநிலத்தின் கொடிக்கு அவர்கள் மிகுந்த மதிப்பளிக்கின்றனர். தனிக் கொடி மட்டுமல்ல, அமெரிக்க மாநிலங்களுக்குத் தனி அரசமைப்புச் சட்டம் உள்ளது. சில மாநிலங்களுக்கு இராணுவமும் இருக்கிறது என்பது குறிப்பிடத் தக்கது. அமெரிக்காவிலுள்ள மாநிலங்கள் இறையாண்மை கொண்டவையாகவும் உள்ளன.

கனடா நாட்டின் 10 மாநிலங்களுக்கும், ஆஸ்திரேலியாவிலுள்ள 6 மாநிலங்களுக்கும், சுவிட்சர்லாந்து நாட்டின் 26 மாநிலங்களுக்கும், ஜெர்மனியிலுள்ள 16 மாநிலங்களுக்கும் தனித்தனி கொடிகள் உள்ளன.

இப்படி உலகெங்குமுள்ள பல்வேறு நாடுகளில் மாநிலங்களுக்கு உரிய முக்கியத்துவமும், மதிப்பும் வழங்கப் படுகிறது. ஆனால், அத்தகைய நாடுகளில் மாநிலங்களுக்கிடையே ஒப்பீட்டளவில் பெரிய அளவு பண்பாட்டு வேறுபாடுகள் இல்லை. ஆனால் இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள மாநிலங்களில் பெரும் வேறுபாடுகள் உள்ளன. எடுத்துக்காட்டாகத் தமிழ்நாடு, பஞ்சாப், காஷ்மீர், நாகாலாந்து போன்ற மாநிலங்களின் மொழி, பண்பாடு போன்றவை முற்றிலும் மாறுபாட்டு உள்ளன. இந்த மாநிலங்களின் தனித்தன்மையை இந்தியப் பண்பாடு எனும் சிமிழுக்குள் அடக்கி விட முடியாது. ஒரு கூட்டாட்சி அமைப்பில் இத்தகைய வேறுபாடுகள், மாறுபாடுகளாக மாறிவிடக் கூடாது. மாநிலங்களின் தனித்துவத்தின் அடையாளம்தான் அம்மாநிலத்தின் கொடி என்பதை அனைவரும் உணர வேண்டும்.

ஆகவே தமிழ்நாட்டிற்குத் தனிக்கொடி தேவை எனக் கூறுவது தேசவிரோதக் குற்றமல்ல. அது ஒரு சனநாயகக் கோரிக்கை. உண்மையான கூட்டாட்சியின் அடையாளமும் அது தான்.

●

**2024 சனவரி 6 அன்று சென்னை - இராயபுரத்தில்...**

# பாசிச பார்ப்பனிய எதிர்ப்பு மாநாடு

முழு நாள் மாநாட்டை தமிழக மக்கள் முன்னணி நடத்த இருக்கிறது..

மாநாட்டின் முழக்கங்கள்:

- **பார்ப்பனிய மதவெறி சாதிவெறி பாசிச பாஜகவை வீழ்த்துவோம்!**
- **அம்பானி அதானி உள்ளிட்ட பன்னாட்டினரின் மூலதனங்களைப் பறிமுதல் செய்து அவர்களை விரட்டியடிப்போம்!**
- **தேசிய இனங்களின் தனி அரசை அமைத்துக் கொள்ளும் உரிமைக்குப் போராடுவோம்!**
- **மக்களவையைக் கலைத்துச் சம உரிமை கொண்ட தேசங்களின்(மாநிலங்களின்) ஒன்றியத்தை உருவாக்குவோம்!**
- **ஆளுநர் என்கிற அதிகார அமைப்பை ஒழிப்போம்!**

அணியமாகுங்கள்.. அணிதிரளுங்கள்..

அழைக்கிறது..

**தமிழக மக்கள் முன்னணி**

# பிராமணரா? பார்ப்பனரா?

**க இரா தமிழரசன்**, தமிழ்த் தேசக் குடியரசு இயக்கம்

பார்ப்பனர் என்ற சொல் தொல்காப்பியம் தொடங்கி அனைத்து இலக்கியங்களிலும் தொழில் சார்ந்த பெயராகவே இருந்து வந்தது. அது முதலில் தமிழர்களைக் குறித்த பெயராகவே இருந்தது. தமிழகத்தில் புகுந்த ஆரியர்கள் தமிழர்களின் பார்ப்பார் தொழிலைக் கைப்பற்றி தனதாக்கிக் கொண்டனர். தோழர். பெ. ம சொல்வதைப் போல தமிழர்களின் பெயரை பிராமணர்கள் திருடவில்லை, தொழிலைத் திருடினார்கள். எனவே, பிராமணர்கள் பார்ப்பனர்கள் என்று தொழில் சார்ந்து அழைக்கப்பட்டனர்.

காமநிலை உரைத்தல், தேர்நிலை கூறல், காதலன் குறிப்பினைக் கூறல், பசு நிமித்தம் கூறல், பயணத்தைத் தெரிவித்தல், பயணம் தவிர்த்தலை அறிவித்தல் ஆகிய ஆறுவகையான செயல்கள் பார்ப்பானுக்குரிய கடமைகளாகும் எனத் தொல்காப்பியம் குறிப்பிடுவதை நாம் ஏற்கனவே பார்த்தோம்

*"தோழி, தாயே, பார்ப்பான், பாங்கன்*
*யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப* (கற்பு.36 )
*பார்ப்பான் பாங்கன் தோழி செவிலி*
*களவிற் கிளவிக் குரியவர் என்ப...*
*...பார்ப்பார் அறிவர் என்றிவர் கிளவி*
*யார்க்கும் வரையார் யாப்பொடு புணர்ந்தே.* (செய். 181)

என்கிறது தொல்காப்பியம்.

*பாங்க னிமித்தம் பன்னிரண்டென்ப* (தொல்.பொ. 104).

மொழியெதிர் மொழிதல் பாங்கற்கு உரித்தே - (தொல்.கற்பியல் 41) என பாங்கன் தொழில் குறித்து தொல்காப்பியமும் விளக்குகிறது.

பாங்கன் என்பவன் தலைவனின் பாங்கறிந்து ஒழுகுபவன். எப்போதும் தலைவனுடன் இருப்பவன். தலைவனுக்கு உறுதுணையாக இருத்தல் மட்டுமல்லாது தலைவனோடு மாறுபட்டு இடித்துரைக்கும் உரிமையும் உள்ளவன் என்கிறது தொல்காப்பியம்.

தொல்காப்பியக் காலத்தில் பார்ப்பனருக்குப் பாங்கன் தொழில் இருந்ததேயன்றி புரோகிதத் தொழில் இல்லை என்றும் இதில், பார்ப்பான், பாங்கன் என்று பிரித்து, முன்னவன் ஆரியனும், பின்னவன் தமிழனுமாவர் என்று பாவாணர் விளக்குகிறார்.

மேலும், இவ்விருவரும் பிற்காலத்தில் முறையே பார்ப்பனப் பாங்கனென்றும், சூத்திரப் பாங்கனென்றுங் கூறப்படுவதாகவும் சூத்திரப் பாங்கன் பாணக் குடியைச் சேர்ந்த பறையன் என்று கூறும் பாவாணர், முதன்முதல் பாணனுக்கேயுரியதாயிருந்த பாங்கத் தொழில் பார்ப்பனரால் கைப்பற்றப்பட்டது என்கிறார்.

மேலும், பார்ப்பான் என்பவன் வேதமோதும் பார்ப்பானென்றும், பாங்கன் என்பவன் வேதமோதாப் பார்ப்பானென்றும் கொள்ளினும் பொருந்தும். வேதமோதி வேள்வி செய்யாத பார்ப்பான் 'வேளாப் பார்ப்பான்' (அகம். 24) என்று கூறப்படுவான் என்று விளக்குகிறார். மேலும்

*"அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்*
*ஐவகை மரபின் அரசர் பக்கமும்...*
*அனைநிலை வகையோடு ஆங்கெழு வகையால் "*

என விளக்குகிறது தொல்காப்பியம்

*கல் தோய்த்து உடுத்த படிவப் பார்ப்பான்*
*முக்கோல் அசை நிலை கடுப்ப, நற்போர்*
*ஓடா வல்வில் தூணி நாற்றிக்,*
*கூடம் குத்திக் கயிறு வாங்கு இருக்கைப் . . . .*

எனப் பாடுகிறது முல்லைப்பாட்டு.

தலைவன், தலைவி, பார்ப்பான், பாங்கன், பாங்கி, செவிலி என்னும் அறுவரும், நற்றாய், கண்டோர், பாணன், கூத்தர், விறலி, பரத்தை என்னும் எழுவரும் ஆகப் பதின்மூவரும் கற்பில் கூற்று நிகழ்த்துவர் என்று நாற்கவிராச நம்பி விளக்குகிறார்.

*"பார்ப்பனமகனே பார்ப்பன மகனே செம்பூ முடுக்கின் நன்னார் களைந்து*
*தண்டொடுபிடித்த தாழ் கமண்டலத்துப்*
*படிவ உண்டிப் பார்ப்பன மகனே."*

என்று குறுந்தொகை (பாடல் 150) பாடுகிறது.

*"நான்மறைமருங்கின் வேள்விப் பார்ப்பான் அருமறைமருங்கின் அரசர்க்கு ஓங்கிய நெடுநல் வேள்விநீ செயல் வேண்டும்"* என்கிறது சிலப்பதிகாரம்.

*" வான்ஊர் மதியம் சகடணைய வானத்துச்*
*சாலி யொருமீன் தகையாளைக் கோவலன்*
*மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்*
*தீவலம் செய்வது காண்பார்க ணோன்பொன்னை"*

என்னும் பாடல் தமிழ்நாட்டுப் பார்ப்பனர் பூசாரி நிலையில் இருந்ததைக் காட்டுகிறது.

ஓதல், ஓதுவித்தல், வேள்வி செய்தல் (தனக்காக) வேள்வி செய்தல் (பிறர்க்காக) ஈதல், ஏற்றல் எனும் ஆறு செயல்களைப் புரிவோர் இவர்கள் எனப் பதிற்றுப்பத்து கூறுவது கவனிக்கத்தக்கது.

பார்ப்பனப் பெண்களைப் பார்ப்பினி என்று அழைப்பதை "பாசண்டன் யான் பார்ப்பினி தன்மேல்" என்று சிலப்பதிகாரமே காட்டுகிறது.

*"மாபெரும்பாத்திரம் பார்ப்பினி சாவி*
*கட்புடைக்கழித்து வருவான்"*

என்று இரட்டைக் காப்பியத்தில் மற்றொன்றான மணிமேகலை கூறுகிறது.

"பார்ப்பார் தவரே சுமந்தார் பிணிப்பட்டார் மூத்தார் இளையார்
பசுப்பெண்டிர் என்றிவர்கட்கு ஆற்ற வழிவிலங்கினாரே பிறப்பிடைப்
போற்றி எனப்படுவார்' எனவும் பார்ப்பார் அறவோர் பசுப்பத்
தினிப்பெண்டிர் மூத்தோர் குழவி எனுமிவரைக் கைவிட்டு என பாதுகாக்கப்பட வேண்டியவர்களை ஆசாரக்கோவை பட்டியல் போடுகிறது.

"பார்ப்பார்மறை ஓதுக" என்றும் "பார்ப்பனக் குறுமகன் போலத்தாமும்" என்றும் ஐங்குறுநூறு கூறுகிறது.

*ஆதி அந்தணன் அறிந்து பரி கொளுவ*
*வேத மாபூண் வையத் தேரூர்ந்து*
*நாக நாணும் மலை வில்லாக*
*மூவகை யாரெயில் ஓரழல் அம்பின் முனிய*
*மாதிரம் அழலவெய்து அமரர் வேள்விப்*
*பாகம் உண்ட பைங்கட் பார்ப்பான்* என்று பரிபாடல் குறிப்பிடுகிறது.

"திருந்துகேளாய் முழுதிர்தமுது பார்ப்பான் அஞ்சின முதுபார்ப்பான்" என்று கலித்தொகை வருணிக்கிறது.

"நின்முன்னோரெல்லாம் பார்ப்பார் நோவன செய்கார்" என்று புறநானூறு (பாடல் 43) காட்டுகிறது.

வேளாப் பார்ப்பான் வாளரந்துமித்த

வளைகளைந்து ஒழிந்த கொழுந்தின் அன்ன, தளை பிணி அவிழா, கரி முகப் பகன்றை என வேள்வியோடு தொடர்பு படுத்தி அகநானூறு பேசுகிறது.

*'பார்ப்பானொடு மனையாள் என்மேல் படாதன விட்டு ஏற்பன கூறார்"*
*"படுபொருள்வவ்விய பார்ப்பான் இவன் என இடுசிறை கோட்டத்து இட்டார்"*
என்று கூறுவதும் சிலப்பதிகாரம் தான்!

*"ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்..*
என்ற புறநானூற்றுச் செய்யுள்
பசுக்களும், பசுபோன்ற இயல்புடைய பார்ப்பன மக்களும் என்று கூறுகிறது.

*மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்*
*பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்* " என்று வள்ளுவர் கூறுகிறார்.

பார்ப்பனர் தமிழரின் மொழி, நூல், மதம், பழக்கவழக்கம் முதலியவற்றை அறிந்தபின், முருகன் (சேயோன்), திருமால் (மாயோன்) முதலிய பழந்தனித்தமிழ்த் தெய்வங்களை ஆரியத் தெய்வங்களாகக் காட்டிப் பழமைகள்' (புராணங்கள்) வட மொழியில் வரைந்துகொண்டு மதத்திற்கு அதிகாரிகளாய்ப் பூசாரித் தொழில் மேற்கொண்டனர் என்றும் இதுவே அவர்கள் குலத்திற்குத் தமிழ்நாட்டில் தலைமைத் தன்மை கிடைக்க வாய்ப்பு கிடைத்தது என்றும், பார்ப்பனர்கள் எப்படி பூசாரித் தன்மை அடைந்தார்கள் என்பதை விளக்குகிறார் பாவாணர். (ஒப்பியன் மொழி நூல்)

எனவே, பார்ப்பனர் என்னும் சொல் எவ்விடத்திலும் இழி சொல்லாக இருந்ததில்லை என்பதை மேற்காணும் எடுத்துக்காட்டிலிருந்து புரிந்து கொள்ள முடியும்.

பார்ப்பனர் என்பது வரலாற்றில் இழி சொல்லாக இருந்ததில்லை என்பதை ஏற்றுக் கொள்ளும் தோழர் பெ. ம. தந்தைப் பெரியாரும் திராவிட இயக்கத்தவரும்தாம் இழிசொல்லாக மாற்றிவிட்டார்கள் என்று ஆதங்கப்படுகிறார். உங்களை இழிவுபடுத்தும் வகையில் ஏன் நடந்துகொண்டீர்கள் என்று பார்ப்பனர்களைப் பார்த்து தோழர் பெ.ம கேட்பதற்குப் பதிலாக அவர்களை ஏன் இழிவுபடுத்தும் வகையில் பேசுகிறீர்கள் என்று நம்மைப் பார்த்துக் கேட்கிறார்.

கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக அரசியல் களத்தில் பார்ப்பனர் என்ற சொல் வேத பிராமணர்களின் தவறுகளைச் சுட்டும் சொல்லாக, வேதநெறி எதிர்ப்புச் சொல்லாக உருப்பெற்று இன்று வரை தொடர்கிறது.

பார்ப்பனியம் என்னும் சொல் பிராமண எதிர்ப்பு, வைதீக மறுப்புச் சொல்லாக மாறியுள்ளது. மற்றபடி தனிப்பட்ட பிராமணர்களின் எதிர்ப்பாக உருவெடுக்கவில்லை. அதைப் பெரியார் மற்றும் திராவிட இயக்கத்தோடு மட்டும் பார்க்கக் கூடாது.

பார்ப்பனர்களைத் தண்டச் சோறு எனும் பொருளிலும், பார்ப்பனர்களைப் பேராசைக்காரன் என்றும் பார்ப்பனர்களை எழுதிய பாரதியார் திராவிட இயக்கத்தைச் சார்ந்தவரா?

பார்ப்பனச் சிறுவனின் குடுமியைக் கிண்டல் செய்யும் ஐங்குறுநூறு பாடல் திராவிட இயக்கப் பாடலா ?

பெரியார் தான் அந்தச் சொல் மீது இழிவு வழங்கி விட்டார் என்பதெல்லாம் பெரியார் மீதான வன்மம் என்பதைத் தவிர வேறொன்றுமில்லை.

1938 இல் இந்தித் திணிப்புக்கு எதிரான போராட்டம் தமிழகமெங்கும் பரவிய போது, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்றவர்கள் சிலர் 'பூணூல் ஒழிக' என்றும் ராஜகோபாலச்சாரியாரின் வீட்டுப் பெண்களையும் பார்ப்பனப் பெண்களையும் இழிவாகச் சொல்லி முழக்கமிட்டதாகவும் பத்திரிகைகள் குற்றம்சாட்டிய போது "பூணூல் என்பது பார்ப்பனியத்தைக் குறிக்கிறது. அப்படிச் சொல்வதில் தவறில்லை என்றும், அதே நேரம், பெண்டு பிள்ளைகளைப் பற்றிப் பேசுவது என்பது குற்றம்தான்... அவர்கள் (பார்ப்பனர்கள்) வேறு பெண்டு பிள்ளை வேறு, அவர்களுக்கு வரும் இழிவு வேறு, அவர்களுக்கு வரும் அவமானம் வேறு, நமது பிள்ளைகளுக்கு வரும் அவமானம், இழிவு வேறு என்று நாம் கருதவில்லை, கருதுவதுமில்லை என உறுதிபடக் கூறுகிறோம். அப்படிப்பட்ட பேச்சு பேசியவனையும் கூப்பாடு போட்டவனையும் அப்படி தண்டிப்பதிலும் எவ்வித அடக்குமுறை கையாளுவதிலும் எனக்கு சிறிதும் ஆட்சேபணையில்லை" என்று கூறியவர் பெரியார். (குடியரசு அரசு, 28.8.1938)

அதேபோல், 1962 - ஆம் ஆண்டு புத்தாண்டு நாளன்று விடுத்த அறிக்கையில்,

"பார்ப்பனத் தோழர்களே! நான் மனிதத்தன்மையில் பார்ப்பனர்களுக்கு எதிரி அல்ல.

தமிழ்நாட்டிலேயே அநேக பார்ப்பனப் பிரமுகர்கள் - பெரியோர்கள் ஆகியோர்களுக்கு மதிப்புக்குரியவனாகவும், அன்பனாகவும், நண்பராகவும்கூட இருந்து வருகிறேன். சிலர் என்னிடத்தில் அதிக நம்பிக்கையும் வைத்திருக்கிறார்கள்" என்று எழுதுகிறார். பார்ப்பனர்களை மிகவும் மரியாதையோடு பார்ப்பனத் தோழர்களே, என்று அழைக்குமளவுக்கு அவரது பண்பு உயர்ந்திருந்தது. உண்மையில், நமக்கு அந்தச் சொல் மீது தனிப்பட்ட வெறுப்பு எதுவும் இல்லை. அந்தச் சொல்லுக்கு உரியவர்களின் கோட்பாடும் செயலும் தான் இழிவுக்குரியது. ஒருவரை உயர்த்தி மற்றொருவரைத் தாழ்த்தும் எந்தச் சொல்லும் இழிவானதுதான். அதனால்தான் பிராமணர் என்னும் தங்களை மட்டும் உயர்த்திக் கொள்ளும் அந்தச் சொல்லுக்குப் பதிலாக பார்ப்பனர் என்னும் தொழில் சொல்லைப் பயன்படுத்த வேண்டும் என்கிறோம். மற்றபடி, நமக்கோ, பெரியாருக்கோ, திராவிட, தமிழ்த் தேசிய, இடதுசாரி, தலித் இயக்கங்கங்களுக்கோ, பார்ப்பனர் என்ற நபர்கள் மீது தனிப்பட்ட வெறுப்பு எதுவும் இல்லை. அவர்கள் கடைப்பிடிக்கும் பார்ப்பனியத் தன்மையைத் தான் எதிர்க்கிறோம்.

பூணூல், குடுமி, பஞ்சகச்சம் வைத்துக்கட்டுதல், தனியான பேச்சுநடை, இறைச்சி உண்ணாமை என தங்களது பழக்கங்களை பார்ப்பனர்கள் இன்றுவரை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். தங்கள் பணியின் பொருட்டு குடுமி, பஞ்சகச்சம் போன்ற பழக்கங்களை விட்டுவிட்டார்கள் என்றாலும் அதன் தன்மையை அவர்கள் ஏற்றுக் கொண்டுதான் இருக்கிறார்கள். இந்தத் தன்மையை தனி நபர்களாக அவர்கள் கைவிடாதவரை அவர்கள் கண்டிக்கப்படுவார்கள். அதே போல், சமூக அளவில் பரப்பி வைத்திருக்கும் பார்ப்பனியம் வீழும்வரை இந்நிலை தொடரவே செய்யும். பார்ப்பனியம் என்பது கடவுளின் பெயரால், நிறத்தின் பெயரால், தொழிலின் பெயரால் தங்களது மேலாதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்ள ஆரியக் கூட்டத்தால் கட்டமைக்கப்பட்ட, வருணாச்சிரமச் சட்டத்தை வைத்து பார்ப்பனரல்லாதோரை ஒடுக்குவதாகும்.

பார்ப்பனியம் என்பது வர்ண அடுக்கு முறையை ஏற்றுக் கொள்வதாகும்.

பார்ப்பனியம் என்பது கோவில் கருவறைக்குள் பார்ப்பனரல்லாதோரை அனுமதிக்க மறுப்பதும், பஞ்சமர்களை கோவிலுக்குள் அனுமதிக்க மறுப்பதுமாகும்.

பார்ப்பனியம் என்பது வர்ணத்தின் மேல்அடுக்கில் உள்ள பார்ப்பனர்களை அழைத்துத் திருமணம், புதுமனை புகல் உள்ளிட்ட இன்ப, துன்ப காரியங்களைச் செய்வதை ஏற்றுக் கொள்வதாகும்.

பார்ப்பனியம் என்பது சமூக நீதிக்கு எதிரானது, இட ஒதுக்கீட்டுக்கு எதிரானதாகும். பார்ப்பனியம் என்பது ஆணாதிக்கத்தை உயர்த்திப் பிடித்து பெண்களை ஒடுக்குவதாகும். பார்ப்பனியம் என்பது தனது மேலாதிக்கத்திற்காக உருவாக்கப்பட்ட சமற்கிருதத்தை உயர்த்திப் பிடித்து தமிழை - நீச பாசை என்று கோவில் கருவறைக்குள்ளும், குடமுழுக்கு உள்ளிட்ட இறை செயல்கள் அனைத்திற்கும் மறுக்கப்படுவதாகும்.

பார்ப்பனர்களால் மட்டுமே வளர்க்கப்பட்ட பார்ப்பனியம் இன்று உயர்சாதி, மேல் சாதி என்று கருதிக் கொள்கிற எல்லா சாதிக்காரர்களிடம் விரவிக் கிடக்கிறது.

எனவே தான், பார்ப்பனரல்லாத தமிழர்கள் தங்களை மேல்சாதி - உயர்சாதி என்று அழைப்பதையும் மறுக்கிறோம். இந்தச் சொல்லும் தன்னை "மேல்" என்றும் "உயர்" என்றும் அழைத்துக் கொள்வதன் மூலம் மற்றவர்களை கீழ் என்றும், தாழ்ந்த என்றும் மறைமுகமாகச் சுட்டுகிறது. பார்ப்பனரல்லாத தமிழர்கள் என்பதற்காக நாம் இத்தகைய சொற்பயன்பாடுகளை நாம் ஏற்கவில்லை. இதனால்தான் மேல் சாதி, உயர்சாதி என்பதற்குப் பதிலாக ஆதிக்கச் சாதி என்கிறோம்.

எனவே, நம்மைப் பொருத்தவரை பிராமணர்களை பிராமணர்கள் என்று அழைப்பதை விட பார்ப்பனர்கள் என்று அழைப்பதே பொருத்தமானது. அதிலும் குறிப்பாக ஆரிய மேலாதிக்கத்தை உயர்த்திப் பிடிக்கும் அவர்கள் கருத்தியல் காரணமாகவும், தமிழ்ப் பார்ப்பனர்களைப் பிரித்துக் காட்ட வேண்டும் என்பதற்காகவும் ஆரியப் பார்ப்பனர்கள் என்று அழைப்பதே பொருத்தமான அரசியல் சொல்லாடலாகும் ●

# காசா பிரச்சனையில் நாம் யாரை ஆதரிப்பது?

**தங்க குமரவேல்**

இன்று நடக்கும் காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல் ஹமாஸ் என்னும் பாலஸ்தீன தீவிரவாத அமைப்பை ஒழித்துக் கட்டும் போர் என உலக நாடுகளை நம்ப வைக்க இஸ்ரேல் கடும் முயற்சி மேற்கொண்டுள்ளது. அதை இந்திய ஊடகங்களும் வழிமொழிகின்றன. உண்மையில் அங்கு என்னதான் நடக்கிறது என்பதை நாம் தெளிவாகத் தெரிந்து கொண்டால்தான் நாம் ஒரு முடிவுக்கு வரமுடியும்.

பாலஸ்தீனம் - இஸ்ரேல் மோதல் என்பது பைபிள் காலம் தொட்டு நடந்து வருகிறது. ஜெருசலேம் நகரை மையப்படுத்தி நடக்கும் மதம் மற்றும் இனம் சார்ந்த ஒரு நீண்ட நெடிய தாய்மண்ணுக்கான போராட்டம். யூதர், கிறிஸ்தவம், இஸ்லாம் மூன்றும் ஆப்ரஹாம் மதங்கள் என்று அழைக்கப்படுகின்றன. ஏனெனில் மூன்று மதங்களுக்கும் தந்தையாக ஆப்ரஹாம் என்ற மூதாதையர் அறியப்படுகிறார். தோரா என்னும் புனித நூலைக் கொண்ட யூதர்களும், பைபிள் என்னும் புனித நூலைக் கொண்ட கிறிஸ்தவர்களும், குரான் என்னும் புனித நூலைக் கொண்ட இஸ்லாமியர்களும் சொந்தம் கொண்டாடும் ஒரு பகுதியாக காசா மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகள் உள்ளன.

எகிப்து மற்றும் ரோமாபுரி அரசுகளுக்கு அடிமைகளாக இருந்த யூதர்கள் தங்களை மீட்க ஒரு மெஸ்யா வருவார் என நம்பினார்கள். இயேசுவைத் தங்களுக்கான நாடு உருவாக்கித்தரும் அரசனாக நம்பினார்கள். ஆனால் அது நடக்கவில்லை. பைபிளில் கூறப்பட்டுள்ள கானான் என்று அழைக்கப்பட்ட பாலஸ்தீன தேசம் தான் கர்த்தரால் தங்களுக்கு வழங்கப்பட்டது என நம்பினார்கள் பாலஸ்தீன தேசத்தில் அரேபியர்கள் இருந்தார்கள், அதற்குள் யூதர்கள் குடியேறி அதை தங்களுடையதாக ஆக்க முயற்சித்தார்கள் அது முதல் பிரச்சனை தொடங்கியது.

யூதர்கள் கடவுள் ஆகிய யெகோவா தங்களுக்கு ஒரு இஸ்ரேல் தேசத்தைக் கட்டாயம் அமைத்துக் கொடுப்பார் என உறுதியாக நம்புகின்ற யூதர்கள் உலகில் பல பகுதிகளிலும் சிதறி வாழ்ந்தார்கள். இந்தியாவிலும் யூதர்கள் வந்து குடியேறினார்கள். கேராளவில் யூதர்கள் வழிபாட்டுதலங்கள் இன்றும் உள்ளன. யூத வழிபாட்டுத்தலத்திற்கு 'சினகாக்' என்று பெயர். ஐரோப்பிய நாடுகளிலும் வட அமெரிக்காவிலும் யூதர்கள் குடியேறி வாழத் தொடங்கினார்கள் .அவர்கள் குடியேறிய அந்தந்த நாடுகளில் அதிகாரத்தைத் தீர்மானிக்கும் சத்தியாக உருவெடுத்தனர்.

தங்களுக்காக ஒரு தேசத்தை உருவாக்க வேண்டும் என்ற வேட்கை மட்டும் யூதர்களுக்குத் தணியவில்லை. அப்போது பாலஸ்தீன தேசத்தில் வாழ்ந்த அரேபியர்கள் வறுமையில் வாடினார். இரண்டு உலகப் போர்களும் யூதர்களின் தேசத்திற்கான நெருக்கடியை அதிகப்படுத்தின. எனவே பாலஸ்தீன மக்களின் வறுமையைப் பயன்படுத்தி யூதர்கள் நிலங்களை வாங்கிப்போட்டு அதில் யூதக் குடியிருப்புகளை ஏற்படுத்தத் தொடங்கினர். இதனால் தங்களின் தேசமே பரிபோகும் என்பதை அறியாத பாலஸ்தீன மக்கள் யூதர்களுக்கு நிலங்களை விற்றுக் கொண்டிருந்தனர்.

இரண்டாம் உலகப்போரின் முடிவில் பாலஸ்தீனம் தேய்ந்து இஸ்ரேலாக மடைமாற்றம் பெற்றது. பல நாடுகள் இஸ்ரேல் என்ற புதிய தேசத்தை அங்கீகரிக்காத நிலையில் வடஅமெரிக்கா உள்ளிட்ட சில நாடுகள் அங்கீகரித்தன. 1949 மே - 1ல் ஐ.நா.சபையால் இஸ்ரேல் நாடு அங்கீகரிக்கப்பட்டது. இஸ்ரேல் என்ற முதலையிடம் தங்கள் நிலப்பரப்பை இழந்த பாலஸ்தீனியர்கள் விழிப்புற்று தங்கள் நாட்டைக் காக்க வேண்டி போராட்டங்களைத் தொடங்கினர். பாலஸ்தீன விடுதலை இயக்கதின் நியாயத்தை அதன் தலைவர் யாசர் அராபத் (PLO) உலகிற்குப் புரிய வைத்தார். பாலஸ்றிழீன - இஸ்ரேல் மோதல் அவ்வப்போது நீடித்துக்கொண்டே இருக்கிறது. ஷெருசலேம் மற்றும் காசா உள்ளிட்ட மேற்குக்கரைப் பகுதிகள் அமைதிக் குலைந்து தவிக்கின்றன.

யாசர் அராபத் மறைவுக்குப் பின் பாலஸ்றிழீன விடுதலை இயக்கம் நீர்த்துப்போனது. அந்த இடத்தை ஹமாஸ் அமைப்பு இட்டு நிரப்பியது. தமிழ் ஈழத்துக்கு ஒரு விடுதலைப் புலிகள் போல பாலஸ்றிழீனத்திற்கு ஒரு ஹமாஸ் செயல்படுகிறது. தமிழ் ஈழ விடுதலைப்புலிகளை தீவிரவாதிகள் என்று பரப்பும் சிங்களப் பேரினவாத அரசுகளைப்போல ஹமாஸ் அமைப்பை தீவிரவாதிகள் என இஸ்ரேல் அரசு பரப்பிவருகிறது. 2009 மே - 17,18 ஆகிய நாட்களில் முள்ளிவாய்கால் இருந்த நிலையில் இன்று காசா உள்ளது. இஸ்ரேல் நடத்துவது அப்பட்டமான இன அழிப்புப் போரே ஆகும். ஆனால் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகும், ஹமாஸ் என்னும் தீவிரவாத அமைப்பை அழிக்கதான் போர் என்று உலக நாடுகளை ஏமாற்றுகிறார்.

இந்திரகாந்தி பிரதமராக இருந்த போது பாலஸ்தீன ஆதரவு நிலைப்பாட்டில் இந்தியா உறுதியாக இருந்து யாசர் அராபத்தை ஆதரித்தது. 1991க்கு பிறகு இந்தியா வட அமெரிக்கா சார்பு நாடாக மாறியது. அதற்குப் பின் கடந்த 9 ஆண்டுகளாக ஆட்சி செய்து வரும் RSS தத்துவார்த்தப் பின்னணியைக் கொண்ட பாரதிய ஜனதா கட்சி இந்தியாவை இஸ்ரேலை ஆதரிக்கும் கேவல நிலைக்குத் தள்ளியுள்ளது. இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவிடம் நேரடியாகப்பேசி இஸ்ரேலை ஆதரிக்கிறார். இதற்குக் காரணம் பார்ப்பனர்களை உயர்த்திப் பிடிக்கும் வர்ணாசிரமக் கொள்கையும் , யூதர்களை உயர்த்திப் பிடிக்கும் சியோனிசம் கொள்கையும், ஒரே குட்டையில் ஊறிய வலதுசாரி பாசிச மட்டைகள் தாம்.

சிங்களப் பேரினவாதத்துக்கு நம் தமிழ் இனத்தைத் பலி கொடுத்தவர்கள் என்கிற வகையிலும் மனித மாண்புகள் என்கிற வகையிலும் நாம் பாலஸ்தீன மக்களைத்தான் ஆதரிக்க வேண்டும். பாலஸ்தீனத்தின் மீதான இஸ்ரேல் போரை நிறுத்த ஐ.நா. சபையை வலியுறுத்தும் அதே வேளையில் இஸ்ரேலின் ஆக்கிரமிப்புப் போருக்குத் துணை போகும் இந்திய ஒன்றிய அரசின் வலதுசாரி பாசிச போக்கை வன்மையாகக் கண்டித்து மக்கள் மன்றத்தில் அம்பலபடுத்துவது நமது கடமையாகும்.

கார்ப்பரேட் அரசுகளும், ஆயுத வியாபாரிகளும் இந்தப் போர் நீடித்தால் தங்கள் சுரண்டலை மென்மேலும் வளர்த்துக் கொள்ளலாம் என நினைத்து போருக்குத் தூபம் போடுகின்றனர். ஆனால் வடஅமெரிக்கா, பிரிட்டானியா உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் உள்ள மனிதநேயம் மிக்க மக்கள் கூட்டம் பாலஸ்தீனத்திற்கு ஆதரவாகவும் தங்கள் அரசுகளின் நிலைப்பாட்டுக்கு எதிராக நடத்தி வரும் போராட்டங்கள் நமக்கான புதிய எழுச்சியைத் தருகின்றன.

இஸ்ரேலிய பாலஸ்தீனிய கம்யூனிஸ்ட் கட்சிகள் இஸ்ரேல் தொடுப்பது இன அழிப்புப் போர் என்றும் பாலஸ்தீனியர்களின் நிலைப்பாடு சரியானது என்றும் கூறியுள்ள நிலையில் தமிழ்நாடு அளவிலும் இந்தியத் துணைக்கண்ட அளவிலும் இயங்கி வருகின்ற புரட்சிகர, இடதுசாரி, கம்யூனிச அமைப்புகளை ஒருங்கிணைத்து பாலஸ்தீன விடுதலையின் தேவையை உணர்த்தும் ஒரு பேரறிக்கையை உருவாக்கி உலகில் பல்வேறு நாடுகளில் இயங்கும் கம்யூனிஸ்ட் கட்சிகள் அறியுமாறு அனுப்பி இஸ்ரேல், பாலஸ்தீனம் போன்று உலகில் நடக்கும் இன அழிப்புப் போர்களைத் தடுத்து நிறுத்த உலகாளவிய கம்யூனிச அகிலத்தைக் கட்டி எழுப்ப தமிழ்நாடு மக்கள் விடுதலை இயக்கம் அனைத்து புரட்சிகர இயக்கங்களையும் அறைகூவி அழைக்கிறது.

பாசிச அரசுகளைக் களையெடுப்போம்!

பாலஸ்தீன விடுதலையை முன்னெடுப்போம்!

# திருக்குறள் பேரவையத்தின் தேவையும்! நோக்கமும்!

**முனைவர் மா. பூங்குன்றன்,** திருக்குறள் பேரவையம்

உலகத் தமிழர்கள் இடத்தாலும், தொழிலாலும், சாதியாலும், சமயத்தாலும், பொருளியல் ஏற்றத்தாழ்வுகளாலும் பிரிந்திருந்தாலும், மொழியால் ஒன்றுபடுகிற குணம் மிகுதி. இந்தக் குணம் பல இனங்களுக்கும் பொருந்தும் என்றாலும், தமிழினத்தில் மேற்கூறிய காரணங்களால் பிரிவு பாராட்டி, பிரிந்து கொள்கிற பண்பு அதிகமாக நடைமுறையில் இருக்கிறது. எனவே 'தமிழால் ஒன்றுபடுவோம்' என்று அறிஞர்கள் உரக்கப் பரப்ப வேண்டிய தேவை தமிழினத்தில் ஏற்பட்டுள்ளது.

அதேபோல் மொழிக்கு அடுத்தபடியாக அல்லது முதற்படியாகவே ஒன்று தமிழினத்தில் நிலவுகிறது என்றால், அது திருக்குறள் மட்டுமே. ஒரு மொழிக்கு இணையாக வைத்துப் போற்றிக் கொள்ளக்கூடிய அளவில் பெருமை பெற்ற நூல் ஒன்று இருக்கிறதென்றால் உலகிலேயே திருக்குறள் ஒன்று மட்டுமே!

இலக்கிய ஒப்பீட்டாய்வின் வழியாகவும், மொழி பயன்படுத்தும் சொற்களைக் கையாளும் முறை இவற்றின் வழியாகவும், இதன் காலம் இன்றைக்கு 2054 ஆண்டுகள் என அறிஞர்கள் முடிவு செய்துள்ளனர். ஆனாலும், இது அறிஞர்கள், பொதுமக்கள் என அனைவர் கைகளிலும் பரவலாகப் பயன்படுத்தத்திற்கு வந்தது இருநூறு ஆண்டுகளாகத்தான்!

கிறித்துவ மதத்தைப் பரப்புவதற்காக உலகமெல்லாம் ஐரோப்பியர் சென்றனர். ஆப்பிரிக்காவிற்குக்கூட அந்நாட்டு நீக்ரோக்களிடையே மதம் பரப்பினார்.

நீக்ரோ மக்களிடையே ஒரு புகழ் பெற்ற பாடல் உண்டு. அதில் மதம் பரப்ப வந்தவர்களின் கொடுமையைப் பற்றி சில வரிகள் உண்டு.

*"அவர்கள் மதம் பரப்ப வந்தார்கள்*
*அவர்கள் கையில் பைபிள் இருந்தது.*
*அவர்கள் மதம் பரப்பி முடித்தபோது*
*எங்கள் கையில் பைபிள் வந்தது.*
*இந்த நாடே அவர்கள் கைக்குப் போனது."*

அந்த வகையில் வல்லாண்மை கொண்ட மதம் பரப்புநர்கள் தமிழ்நாட்டிற்கும் வந்தனர். திருக்குறளைக் கண்டனர். பைபிளைக் கீழே வைத்துவிட்டுத் திருக்குறளை எடுத்துக் கொண்டு உலகம் முழுவதும் பரப்பினர். திருக்குறளின் சிறப்பை அவர்கள் உணர்ந்திருக்காமல் இது நடந்திருக்காது. பைபிளைப் பரப்ப கிறித்துவமதம் துணையிருந்தது.

திருக்குறள் எந்த ஒரு மதத்தின் துணையுமின்றி பொதுமாந்த அறவொழுக்கத்தை மட்டுமே கொண்டிருந்ததால் அவர்கள் வேறுபாடின்றி, அதைப்பரப்ப முன் வந்தார்கள். எனினும் ஐரோப்பியரின் அறிவு நேர்மையை நாம் பாராட்டத்தான் வேண்டும்.

குசராத்தி மீதும், இந்தி மீதுமே பற்றுக்கொண்ட காந்தியடிகள் தமிழ் மொழியைக் கற்கத் தொடங்கியதே திருக்குறளை மூல மொழியில் படிக்கவேதான் என்று கூறியுள்ளார்.

தமிழ் மொழியிலுள்ள நூல்களையெல்லாம் இருட்டடிப்புச் செய்வதும், மொழி பெயர்ப்புச் செய்து கொண்டு மூலநூல்களை அழிப்பதும், இவை தங்களின் நூல்களிலிருந்துதான் தோன்றின என்றும், தங்கள் நூல்கள்தாம் இவற்றிற்கெல்லாம் மூலம் என்றும் இழிவுபடுத்துவதுமான செயல்கள் இந்நாட்டில் நடைபெற்றன. தமிழினத்தின் அடையாளத்தைக் காக்கக் கூடிய நூல்கள் மூன்று. தமிழ் மொழியைக் காக்கும் தொல்காப்பியம், தமிழரின் கலைப்பண்பாட்டைக் காக்கக்கூடிய சிலப்பதிகாரம், அறவொழுக்கத்தைக் கற்பிக்கும் திருக்குறள் ஆகியவையே அவை.

வேதத்திலிருந்துதான் திருக்குறள் உருவாக்கப்பட்டது என்று கூறி திருக்குறளின் பெருமையை இழிவுபடுத்தும் போக்கு பரிமேலழகர் காலத்திலேயே தொடங்கிவிட்டது.

பரிமேலழகர் திருக்குறளுக்குச் சிறந்ததொரு உரையை எழுதப் புகுந்து அதன் கருத்துகளை ஆரியச் சார்பாகத் திரித்து உரையை எழுதிவிட்டார் என்பது தெளிந்த தமிழறிஞர்களின் கருத்து. பரிமேலழகர் முதல் நாகசாமி வரையிலுள்ள ஆரியம்சார் அறிஞர்களுக்கெல்லாம் இதே முயற்சிதான். அவர்கள் சேற்றைவாரிப் பூசுவதும், அதைத் தமிழறிஞர்கள் தூய்மைப்படுத்துவதுமே காலங்காலமாக நடைபெற்றுவருகிறது.

இந்த வல்லாண்மை முயற்சிகளினின்று திருக்குறளைக் காத்துக் கொள்வதும் அதன் பெருமைகளையும் தனித்தன்மைகளையும் மீட்டுக்கொள்வதும் நம் கடமையாக இருக்கிறது.

அதன் பெருமைகளைத் தமிழினம் முழுவதுமாக உணர்ந்து கொண்டுள்ளதா என்பதும், உணர்ந்து பின்பற்றுகிறார்களா என்பதும் ஐயத்திற்குரியது. அதைப் போற்றுகிற அயலவர்கள் அளவிற்குத் தமிழர்கள் அதைப் போற்றிக் கொள்ளவில்லை என்பதே உண்மையாகும். கிறித்துவ, இசுலாமியத் தமிழறிஞர்கள் திருக்குறளைப் போற்றிக் கொள்கிற வகையில்கூட ஆரிய மதத்தினர் போற்றுவதில்லை. மாறாக இழிவையே அள்ளித் தெளிக்கிறார்கள்.

திருக்குறளை இந்தக் காலத்திற்குத் தக்கவாறு அதனை நடைமுறைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அதற்கு முதலில் அதைக் காத்துக் கொள்வதும் காலத்திற்குத் தக அதுகூறும் அறவாழ்வைப் பின்பற்றுவதுமே தேவையாகும்.

தமிழ்நாட்டில் எண்ணற்ற திருக்குறள் அமைப்புகள் தோற்றுவிக்கப் பெற்று, பல்வேறு நோக்கங்களுடன் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் ஒன்றிணைக்கும் முயற்சியில் 'திருக்குறள் பேரவையம்' என்ற ஒரு பேரியக்கத்தை நாம் கூட்டியிருக்கிறோம்.

திருவள்ளுவம் காட்டியிருக்கிற அறநெறியே தமிழ்நாட்டிற்குரிய வாழ்க்கை நெறியாக இருக்க முடியும் எனப் பேரவையம் கருதுகிறது..

தனி மாந்த வாழ்க்கை நிலைகள் மட்டுமின்றி குமுக வாழ்க்கை நிலைகளுக்கும், உலகியல் நிலைகளுக்கும் அறநெறியே சிறந்த வாழ்வியல் நெறி எனப் பேரவையம் பறைசாற்றுகிறது..

அறநெறி என்பது,
* ***பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புவது***
* ***பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்பது***
* ***இரந்துண்டு வாழாதிருப்பது***
* ***ஈதல் இசைபட வாழ்வது***
* ***வாய்மை நெறி ஏற்பது***
* ***கல்வி விழுச்செல்வம் என ஒழுகுவது***
* ***மக்கள் பண்பு கொள்வது***
* ***ஒப்புரவு அறிந்தேற்று அறனிழுக்காது வாழ்வது***
* ***ஆள்வினையும் ஆன்ற அறிவும் பெறுவது***
* ***குடி செய்து வாழ்வது***

மேற்கூறப்பட்ட 10 நெறிகளோடு ஒழுகுவதும்..
ஆரிய வர்ணப் பாகுபாட்டை மறுப்பதும்..
சாதியக் கூறுபாடுகளைப் புறந்தள்ளுவதும்..
சமய வழிபாடுகளை ஏலாது மறுப்பதும்..
திருக்குறள் பேரவைய உறுப்பாண்மைக்குரிய அறநெறிமுறை .
எனவே அவற்றைப் பரப்புவதும்..

அப்படியான திருக்குறளை அனைவருக்கும் இனங்காட்டுவதும் திருக்குறள் பேரவையத்தின் அடிப்படை நோக்கமாகும் ●

**தமிழ்நாடு இதழுக்காக அண்மையில் நன்கொடை வழங்கியவர்கள்**

| | |
|---|---|
| தோழர் ஆற்றல் | 300 |
| திரு. தென்முகநம்பி | 1000 |
| தேவக்கோட்டைத் தோழர்கள் | 5000 |

வெளியீட்டுக் குழு : பொழிலன், பேரா. த. செயராமன், முத்தமிழ், கண. குறிஞ்சி, நிலவழகன், பாவெல்
**தமிழ்நாடு** (மாத இதழ்) 4/197 பல்லவன் நகர், 3 ஆவது தெரு, மேடவாக்கம், சென்னை 600100 கைப்பேசி 97108 75283, 91713 78874
(கீற்று இணையதளத்திலும் பார்க்கலாம்) மின்னஞ்சல் : thamizhnadu2051@gmail.com
அச்சிட்டோர் : மூகாம்பிகை அச்சகம், 24, வாணிபர் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600005